பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 11 திங்கட்கிழமை 27.11.2023 கதிர் 381

# கடும் கெடுபிடிக்கு நடுவில் இன்று மாவீரர்கள் நாள்

## உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் பூர்த்தி

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து உயிர் ஈகம் செய்தவர்களுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தமிழர் தாயகத்தில் இன்று உணர்வெழுச்சியுடன் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனைத் தடுப்பதற்கு நீதிமன்றங்கள் ஊடாகவும் நேரடியாகவும் பொலிஸார் கடும் கெடுபிடிகளை முன்வைத்துவரும் நிலையிலும், நிகழ்வுகளுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தி வரும் நிலையிலும் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் போன்று ஒருங்கிணைத்தவர்கள் வரலாற்றில் வேறு யாரும் இல்லை. அந்த நிலைமை போரின் பின்னர் குறிப்பாக அற்றுப் போனது. கட்சி ரீதியாகத் தமிழர்கள் பிளவுண்டனர். அதன் விளைவாகத் தமிழர்களை ஒருங்கிணைப்பதற்குப் புலிகளின் மீள்வருகை அவசியம் என்ற கருதுபவர்கள் கணிசமானோர் உண்டு.

இந்த நிலையில் மாவீரர் நாள் மற்றும் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் ஆகியவற்றை முன்னிட்டு வந்துள்ள இரண்டு அறிவிப்புக்கள் புலிகளின் தலைமை குறித்த குழப்பத்தையே ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன. ☞ 2

## கட்டுநாயக்காவில் குடிவரவு திணைக்கள கணினிகள் செயலிழப்பு

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் குடிவரவு குடியல்வுப் பணியகத்தின் கணினிகள் செயலிழந்து போனதால் சனிக்கிழமை நள்ளிரவு முதல் பணிகள் பாதிக்கப்பட்டன.

இரவு 11.30 மணியளவில் கணினி வலையமைப்புச் செயலிழந்ததை அடுத்து விமான நிலையத்தின் அனைத்துப் பணிகளிலும் அது பாதிப்பை ஏற்படுத்தியது.

இதனால் வெளிநாடு செல்வதற்காக வந்த ஆயிரக்கணக்கான விமானப் ☞ 2

## மாவீரர்களின் சாபத்தை ரணிலும் அனுபவிப்பார்

### சாணக்கியன் உணர்ச்சிப் பெருக்கு

'அரசும், பொலிஸாரும், படையினரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப்பயன்படுத்தித் தமிழர்களை முடக்கப் பார்க்கின்றார்கள். ஆனால் தமிழர்களின் உணர்வெழுச்சியை அவர்களால் அடக்க முடியாது. மாவீரர்களின் சாபத்தைக் கோட்டாபய அனுபவித்தது போல் தற்போதைய ஜனாதிபதி ரணில் அனுபவிக்கும் காலம்வெகுதொலைவில் இல்லை.'

இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் அவர் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரில் உயிரிழந்தவர்களின்குடும்பஉறுப்பினர்களுக்கு மதிய உணவுவழங்கியதற்காக ஜனநாயகப் போராளிகளின் கட்சியின் உபதலைவர்பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

அரசும், பொலிஸாரும், படையினரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினூடாக எமது இனத்தை முடக்கப் பார்க்கின்றார்கள். எமது இனத்துக்காக-இனத்தின் விடுதலைக்காகப் போராடிய மாவீரர்களின் துயிலும்இல்லங்களைத் தரைமட்டமாக்கமுயலும் அரச தரப்பினரும், இனவாதிகளும் எம்மவர்களின் கல்லறைகளைப் பார்த்து இன்றளவிலும் பயப்படுவதுஏன்?தமிழர்களின் உணர்வெழுச்சியை அவர்களால் அடக்க முடியாது.

மாவீரர்களின் சாபத்தைக் கோட்டாபய அனுபவித்தது போல் தற்போதைய ஜனாதிபதி ரணில் அனுபவிக்கும் காலம்வெகுதொலைவில் இல்லை. இந்தக் ☞ 8

## பொலிஸ் மா அதிபர் நியமனம் இன்று விசேட கலந்துரையாடல்

புதிய பொலிஸ் மா அதிபரை நியமிப்பது தொடர்பில் இன்றைய தினம்விசேடகலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளதாகபொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.இதன்போது புதிய பொலிஸ் மா அதிபருக்கான பெயர் இறுதிசெய்யப்படும்என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, சனிக்கிழமையுடன் ☞ 2

### ஆளும் தரப்பை கடுமையாக விமர்சிக்கிறாராம்

## எதிர்க் கட்சித் தலைவரின் மீது நடவடிக்கை எடுக்க கோரிக்கை

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மீது நடவடிக்கை எடுக்கும்படி ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் வலியுறுத்தியுள்ளனர் என்று அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் பாராளுமன்ற உரை தொடர்பில்கடும்விமர்சனம் காணப்படுகிறது. வெறுக்கத்தக்க சொற்களை பயன்படுத்தி ஆளும் தரப்பினரைச் சாடுகிறார். இவ்விடயம் தொடர்பில் உரியநடவடிக்கை ☞ 9

## பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் திரும்பி வருவார் என நம்பிக்கை

### மதிமுக தலைவர் வைகோ தெரிவிப்பு



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின்69ஆ-வது பிறந்த நாள்உலகெங்கும் வாழும் தமிழர்களால் நேற்றுக் கொண்டாடப்பட்டது. பல இடங்களிலும் கேக் வெட்டப்பட்டும், இனிப்புகள் வழங்கப்பட்டும்கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. பிறந்த நாளையொட்டி கருத்துத் தெரிவித்த மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ, பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் எனவும் அவர் திரும்பி வருவார் என்ற நம்பிக்கையுடன் உள்ளோம் என்றும் தெரிவித்தார்.

சென்னை ☞ 8

## நாட்டின் நீர் வளத்தையும் விற்க அரசு நடவடிக்கை

உத்தேச நீர்வழங்கல் சட்டத்தின் ஊடாக நாட்டின் நீர்வளத்தை விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழுஉறுப்பினர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

தம்புள்ளவில் நேற்று நடைபெற்ற விவசாயிகளுடனான சந்திப்பின்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

நாம் சாவுப்படுக்கையில் இருக்கும்போது எதனைக் கோருவோம். தண்ணீர் கொஞ்சம் தாருங்கள் என்றுதான் கோருவோம். அதுதான் மனிதனின் அடிப்படையாகும்.

அவ்விதமான அடிப்படைக் ☞ 8

## உயிரிழந்த பொலிஸ் சார்ஜன்டின் குடும்பத்துக்கு தொடர்ந்து சம்பளம்

### பிரதிப் பொலிஸ் மா அதிபர் தென்னக்கோன் அறிவிப்பு

கொழும்பு மாவட்டம், ஜா-எல பகுதியில் சந்தேகநபரைத் துரத்திச்சென்ற சமயம் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த பொலிஸ் சர்ஜன்ட்டின் பெற்றோருக்கு உயிரிழந்தவரின் சம்பளம் தொடர்ச்சியாக வழங்கப்படும் என மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

உயிரிழந்தசார்ஜன்ட் கிருஷ்ணமூர்த்தி பிரதாபனின்இறுதிக்கிரியைகள் நேற்று சாவகச்சேரியில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு தனது இறுதி மரியாதையைச் செலுத்திய பிரதிப்பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்,பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் ☞ 8

## அனைத்துக் கிராமங்களில் இருந்தும் ஏற்றுமதி மூலம் டொலர் உழைக்கலாம்

### ஜனாதிபதி அனுராதபுரத்தில் தெரிவிப்பு

அனைத்து கிராமங்களையும் ஏற்றுமதிக் கிராமங்களாக முன்னேற்றி ஏற்றுமதிப் பொருளாதாரத்துடன் ஒன்றிணைப்பதன் ஊடாக அதிக அந்நியச் செலாவணியை பெற முடியும்என்றுஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவான 'உறுமய' தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் நிகழ்ச்சியின் முதல் கட்டத்தை அனுராதபுரம் நொச்சியாகமவில் நேற்றுத் தொடக்கிவைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் இதனைத் தெரிவித்தார்.அவர்அங்கு மேலும்தெரிவித்ததாவது;

இதன்போது அவர், ஷங்ரிலா ஹோட்டலுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்க முடியுமாயின், எமது நாட்டில் பரம்பரை பரம்பரையாகவிவசாயம் செய்துவரும்மக்களுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்குவதில் என்ன தவறு? ஷங்ரிலா அமைந்துள்ள ☞ 8

## முள்ளிவாய்க்காலில் ஆயுத தேடல் 4ஆவது நாளாகவும் தொடர்ந்தது





விடுதலைப் புலிகளின் இராணுவ உபகரணங்களை தேடி முள்ளிவாய்க்காலில்தோண்டும் நடவடிக்கை நான்காவது நாளாகவும் தொடர்ந்தது.

போரின் இறுதி நாட்களில் ☞ 9

## இனி இது .....

பிரபாகரனின்பிறந்தநாளையொட்டி தமிழ்நாட்டில் மதிமுக தலைவர் வைகோ விடுத்த செய்தியில், பிரபாகரன் உயிரோடு இருக்கிறார், அவர் திரும்பி வருவார் என்கிற நம்பிக்கையில் செயற்பட்டு வருகின்றோம் என்று தெரிவித்திருக்கிறார். இதற்கு முன்னர் தலைவர் உயிரோடு இருக்கின்றார் பொருத்தமான தருணத்தில்வெளிப்பட்டுவிடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து வழி நடத்துவார் என்று பழ நெடுமாறன் தெரிவித்திருந்தார். அதனையும் மேற்கோள்காட்டிய வைகோ பழ நெடுமாறன் போன்ற தலைவர்கள் புலிகளோடு அதிகளவு நெருக்கத்தைக் கொண்டவர்கள், அவர்கள் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்த நிலையில் வவுனியாவில் செய்தியாளர்களைச் சந்தித்த புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா, இன்று மாவீரர் நாளில் தலைவரின் மகள் துவாரகா பிரபாகரன் உரை நிகழ்த்துவார் என்று தெரிவித்திருக்கிறார்.

துவாரகாவின்இருப்பதுதொடர்பில் எழுப்பப்பட்ட சந்தேகங்களை எல்லாம் தாண்டி, அவர் உயிருடன் இருக்கின்றார் என்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவரால் மாவீரர் நாள் உரை நிகழ்த்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

2008ஆம் ஆண்டு தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரையின் பின்னர் தற்போது தேசிய தலைவரான பிரபாகரனின் மகள் தமிழர்களின் அரசியலை முன்கொண்டு செல்லவுள்ளார், அவரது மாவீரர் நாள் உரை நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்தச்செய்தியினைஉலகத்தமிழ் மக்களுக்கு தெரிவிக்குமாறு தனக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது என்று அவர் தெரிவித்தாலும் யாரால் அந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது என்பதைக் குறிப்பிடவில்லை.

”2009ஆம் ஆண்டு போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களுக்கான ஒரு அரசியல் தலைமைத்துவம் இல்லாமல் இருந்தது. நாம் சிதறுண்டு காணப்பட்டோம். போராளிகளுக்கும் மக்களுக்குமான தலைமை இல்லாமல் இருந்தது. இந்த தருணத்திலேயே தற்போது மாவீரர்களது தியாகங்கள் வீண் போகாத வகையில் துவாரகா பிரபாகரன் தலைமை ஏற்க வந்துள்ளார்’’ என்றும் அவர் கூறினார்.

துவாரகாவின் வருகையின் பின்னர்அனைத்துதமிழ்கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படும் நிலை உருவாகும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

தலைவர் உயிருடன் இருந்தால் துவாரகாஏன்மாவீரர்நாள்உரையாற்றுகிறார் என்கிற கேள்வியைத் தவிர்க்க முடியவில்லை. அதற்கான விளக்கமும் எந்தத் தரப்பாலும் தெரிவிக்கப்படவுமில்லை. துவாரகா உரையாற்றுவார் என்று சொல்லும் தரப்பினரும்தலைவர்எங்கிருக்கிறார் என்று எந்தத் தகவலையும் தெரிவிக்கவில்லை.

துவாரகாவின் மாவீரர் நாள் உரை தொடர்பில் இன்பராசாவுக்கு முன்னரே இலங்கைப் புலனாய்வு அமைப்புக்கள் அது தொடர்பில் தகவல் வெளியிட்டுவிட்டன. இப்படி ஒரு காணொலி வரப்போகின்றது என்கிற செய்திகளும் புலனாய்வு அமைப்பை மேற்கோள்காட்டி வெளியாகி இருந்தன என்பதும் இங்கு கூர்ந்து நோக்கத்தக்கது.

தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் பிரபாகரன். விடுதலைப் புலிகள் இயக்கம்என்பனவெல்லாம்இன்னும் தெற்கு வாக்குகளில் செல்வாக்குச் செலுத்தக்கூடிடயவையாகவே இருக்கின்றன என்பதையும் மறுக்கமுடியாது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கடும் கெடுபிடிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று மாலை 06.05இற்கு நினைவொலி எழுப்பபட்டு, 06.06இற்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, 06.07இற்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. மாவீரர்கள் துயிலுமில்லங்களில் ஒன்றுகூடும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் அமைதியான முறையில்இன்னுயிர்களைதியாகம் செய்தவர்களுக்கான அஞ்சலியை செலுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த ஒரு வார காலமாக மாவீரர் வாரம் தமிழர் தாயகம் எழுங்கும் கடைப்பிடிக்கப்பட்டது. அதன் இறுதி நாளான இன்று மாவீரர் நாள் உணர்வெழுச்சியுடன் இடம்பெறவுள்ளது.

### கிழக்குமாகாணம்

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடிமுன்மாரி, தரவை, தாண்டியடி, வாகரை கண்டலடி ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களிலும், திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்திலும், அம்பாறை கஞ்சிக்குடிச்சாறுதுயிலுமில்லத்திலும் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.இதனைவிடவும், கிழக்கு பல்லைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தினால் விசேட நினைவேந்தலுக்கானஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஏற்பாடு செய்த மாவீரர்களின்பெற்றோர்மதிப்பளிப்பு நிகழ்வு ஆரம்பமாகுவதற்கு முன்னதாகவே அந்தக் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அத்தோடு, மட்டக்களப்பு வாகரையிலுள்ளமாவீரர்துயிலும்இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் நினைவுகல்வெட்டுக்களையும்கம்பி வேலி அமைக்கப்பட்ட கொங்கிறீட் தூண்களையும்இனந்தெரியாதோர் அடித்து உடைத்ததுடன், சோடிக்கப்பட்ட கொடிகளும் அறுத்து எறியப்பட்டிருந்தன. அதேபோன்று தரவைமாவீரர்துயிலும்இல்லத்திலும் நினைவுத்தூபி மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டது. எனினும் அவை மீளவும்அமைக்கப்பட்டுநினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் முழுமை பெற்றுள்ளன.

இதேவேளை, திருகோணமலை ஆலங்குளத்தில் மாவீரர் நினைவேந்தலைச் செய்வதற்கு 17 பேருக்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. மூதூர் நீதிவான் பிறப்பித்துள்ள தடையுத்தரவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உட்பட 17 பேரின் பெயர்களும், பொதுமக்களின் பெயர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் நினைவேந்தலுக்கான விசேட ஏற்பாடுகள்நிறைவுக்குவந்துள்ளன.

அரசியல்கட்சிகளின்அலுவலங்கள், சிவில் அமைப்புக்களின் அலுவலகங்கள்,தனியார்இல்லங்கள், மதத் தலங்கள் ஆகியவற்றிலும் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், கொடிகாமம் மாவீரர்துயிலுமில்லம்,எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம், உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம், சாட்டி மாவீரர்துயிலுமில்லம்ஆகியவற்றில் மஞ்சள், சிவப்பு கொடிகள் கட்டப்பட்டு அஞ்சலிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்பாக, மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு அங்கு அஞ்சலி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நவம்பர் 21ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்ற நிலையில் இன்றும் பொதுமக்களின் பங்கேற்புடன் விசேட அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

வடமராட்சி- நெல்லியடி மாலி சந்தி பிள்ளையார் கோவில் முன்பாகவும்மாவீரர்நினைவாலயம் பொதுமக்கள் அஞ்சலிக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு அங்கும் இன்றையதினம் விசேட அஞ்சலிக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள நினைவுத்தூபியிலும் இன்று இறுதி நாள் அஞ்சலி இடம்பெறவுள்ளது.

அதேநேரம், யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸாரால் மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தடை செய்யக்கோரி யாழ். நீதிவான் மன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீது இன்று காலையில் விசாரணை இடம்பெறவுள்ளது.

முன்னதாக, வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, மானிப்பாய் பொலிஸார் மாவீரர்களுக்கான நினைவேந்தலை தடை செய்வதற்கான உத்தரவைக் கோரி மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

### முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தடுக்க பொலிஸார் கடும் கெடுபிடிகளோடு நடந்துகொள்கின்றனர். முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை நினைவு கூருவதற்கோ, தடைசெய்யப்பட்ட அமைப்பின் கொடிகள், சின்னங்கள், பாடல்கள், சிந்தனைகள் உள்ளிட்டவற்றை வெளிப்படுத்துவதற்கோ தடையுத்தரவு பிறப்பிக்குமாறு நீதிவான் நீதிமன்றில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் விடுக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு அமைவாக, முள்ளிவாய்க்கால் மேற்கு கிராம அபிவிருத்திசங்கதலைவர்வீரசிங்கம் மற்றும் அவருடனான குழுவினர், தமிழ்தேசியகூட்டமைப்பின்இணை செயற்பாட்டாளர் முத்துக்குமார் வசந்தம் புதுமாத்தளன், முல்லைத்தீவு மற்றும் அவருடனான குழுவினர், முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் கந்தையா உதயகுமார் மற்றும் அவருடனான குழுவினர், தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் அவருடனான குழுவினர், சமுதாய செயற்பாட்டாளார் பீட்டர் இளஞ்செழியன் மற்றும் அவருடனான குழுக்கள், முல்லைத்தீவு தமிழ் சங்க தலைவர் கந்தசாமி கௌரிராசா மற்றும் அவருடனான குழுவினர் ஆகியோருக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும், முல்லைத்தீவு கடற்கரை, இரட்டைவாய்க்கால், தேவிபுரம், களிக்காடு, கொக்குத்தொடுவாய், சுதந்திரபுரம், அளம்பில், வன்னிவிளான்குளம், முள்ளியவளை, ஆலங்குளம், இரணைப்பாலை,முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு முழுமையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### மன்னார், வவுனியா

மன்னார் மாவட்டத்தின் ஆட்காட்டிவெளி நினைவேந்தலுக்கு தடையுத்தரவு கோரி செய்யப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் ஆட்காட்டிவெளி, பெரிய பண்டிவிரிச்சன், முள்ளிக்குளம் துயிலுமில்லங்களிலும், வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் துயிலுமில்லத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.

### கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஏழு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளால் நீதிவான் நீதிமன்றில் தடையுத்தரவு கோரி தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம், முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம், தேராவில் மாவீரர் துயிலும் இல்லம் ஆகியவற்றில் அஞ்சலி நிகழ்வுகளுக்கான பிரமாண்டமான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

விசேடமாக, கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் ஒன்றுகூடும் பொதுமக்களால் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக 2009ஆம்ஆண்டுக்கு முன்னரைப் போலமாவீரர்துயிலும்இல்லங்களில் விளக்கேற்றப்படவேண்டும் என்ற தீர்மானத்துக்கமைய, இம்முறை துயிலும் இல்ல வளாக 2007ஆம் ஆண்டுவரையிலானமாவீரர்களின் பெயர்ப் பட்டியல் பெறப்பட்டு ’அ’ தொடக்கம் ’ஈ’ வரையான வலயங்கள் பணிக்குழுவினரால் உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இருந்த கல்லறைகள்மற்றும்நினைவுக்கற்கள் என்பவற்றின் பெயர் விவரங்கள் குறித்த வலயங்களில் பதியப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். ஆகவே, அந்த மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் 2 மணித்தியாலங்களுக்கு முன்பே வருகை தந்து, தங்களது பிள்ளைகளின் பெயர் எந்த வலயத்துக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கிறதோ, அந்த வலயத்துக்குள் சென்று சுடரேற்றுவதற்குத் தயாராகுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

2007, 2008, 2009 ஆண்டுகள் வரையும் மாவீரர்களானவர்கள் பெயர் விவரங்கள் புலிகளின் தலைமைச் செயலகத்தினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும்போது அந்தப் பெயர் விவரங்களும் எதிர்வரும் காலங்களில்சேர்த்துக்கொள்ளப்படும் என்றும்பணிக்குழுஅறிவித்துள்ளது.

இவ்வாண்டுபெயர்விவரங்களற்ற மாவீரர்களுக்காக ’உ’வலயம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த வலயத்தில் பெயர் குறிப்பிடப்படாத மாவீரர்களுக்கான சுடர்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அதைத் தவிர, கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் தவிர்ந்த ஏனைய துயிலும் இல்லங்களுக்குச் செல்ல முடியாதவர்கள் விளக்கேற்றுவதற்காக ’ஊ’ வலயம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இந்த வலயங்களின் அடிப்படையில், உயிர் நீத்த மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையவர்கள் நேரங்காலத்தோடு வருகை தந்து, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒழுங்கமைப்புக்கு அமைவாக அஞ்சலி செலுத்த முடியும் என்று பணிக்குழு அறிவித்துள்ளது. மேலும், இன்று பிற்பகல் 3 மணியுடன் துயிலும் இல்லத்தின் பிரதான வீதியில் போக்குவரத்து தடை விதிக்கப்பட்டு, மாற்று வழி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாற்று வழியை பயன்படுத்த சாரதிகள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் பணிக்குழாமினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## உயிரிழந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தபோது இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எந்தவொரு பொலிஸ் உத்தியோகத்தரும் முறையாக பயிற்சி பெற்ற பின்னரே சேவைக்கு உள்வாங்கப்படுவர். பிரதாபனும் அவ்வாறே சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

மேல்மாகாணத்தில் தொடர்ச்சியாக போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய, போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான சந்தேகநபர் தப்பி ஓடுவதற்கு முயற்சி செய்திருந்தார்.

அவரைப்பிடிக்கும்நோக்கிலேயே குறித்த பொலிஸ் உத்தியோகத்தரும் தமது வாழ்க்கையை பொருட்படுத்தாமல் கடமையைநிறைவேற்ற முற்பட்டுள்ளார். அந்த முயற்சியில், சிறந்த நீச்சல் பயிற்சி இருந்தும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நீரில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார். அவரின் இழப்பு கவலையளிக்கிறது.

அவரது பெற்றோரின் வாழ்க்கையை கொண்டு செல்வதற்காக அவரது வேதனம் அவர்களுக்குத் தொடர்ந்து வழங்கப்படும் - என்றார்.

(தொடர்புபட்ட செய்திகள் உள் பக்கங்களில்)

## கட்டுநாயக்காவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகள்அசௌகரியமடைந்தனர்.

குடிவரவுத் துறையின் கணினி அமைப்பு பல தனியார் துறை நிறுவனங்களால் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. எனினும் முறையானபராமரிப்புஇல்லாததால் மாதத்தில் பல முறை கணினி வலையமைப்பு இவ்வாறு செயலிழக்கின்றது என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தக் கணினி வலையமைப்பு சர்வதேச இன்டர் போல் காவல்துறையுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் அளவில் மீண்டும் இந்த கணினி வலையமைப்பு படிப்படியாகச் மீளவும் செயற்பாட்டுக்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.



# ரணில் சொல்வார் செய்ய மாட்டார்

## மனோ சாட்டை



ஜனாதிபதி பெருந்தோட்ட அபிவிருத்திக்காக ஒதுக்கியுள்ள 4 பில்லியன் ரூபாவை பெற்றுக் கொள்ள அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனெனில் ரணில் விக்ரமசிங்க சொல்வார் செய்ய மாட்டார். அத்துடன் இலங்கையை ஆசியாவில் உயர்ந்த இடத்துக்கு கொண்டுசென்ற பெருந்தோட்ட மக்களுக்கு இலங்கை அரசாங்கம் ஒன்றுமே வழங்கியதில்லை என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தில் நீர்வழங்கல் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்கான ஒதுக்கீட்டுசட்டமூலம் மீதான குழு நிலைவிவாதத்தில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு அண்மையில் வந்து தெரிவிக்கும்போது 1948 இல் திறைசேரியில் வெளிநாட்டு நிதியம் அதிகமாக இருந்தது எனத் தெரிவித்திருந்தார்.

அது உண்மை. வெளிநாட்டு மூலதனத்தில் ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்த இடத்தில் இலங்கையே இருந்தது. பிரித்தானியாவுக்கும் கடன் கொடுத்ததாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

எனது நினைவின் பிரகாரம் ஜேர்மனிக்கே கடன் கொடுதோம் என நினைக்கிறேன். கடன் கொடுக்கும்அளவுக்கு வெளிநாட்டு நிதியம் எம்மிடம் இருந்தது என்றால்அதுஎமதுஉழைப்பாகும். இலங்கையில் ஏற்றுமதி என அப்போது தேயிலை, இறப்பர் மாத்திரமே இருந்தது.

அதனால் மலையகத் தோட்ட தொழிலாளர்களின் உழைப்பே நாட்டின் வெளிநாட்டு நிதியம் அதிகளவில் இருப்பதற்குக் காரணமாகும்.

இவ்வாறு பாரிய உழைப்பை நாட்டுக்காக செய்த இந்த மக்களுக்கு இலங்கை அரசு என்ன பரிசுவழங்கியதுஎன்றால்,ஒன்றும் இல்லை என்றே தெரிவிக்க வேண்டும்.

உலக வங்கி, மத்திய வங்கி, செஞ்சிலுவை சங்கம் மற்றும் இலங்கைக்குவந்துசென்றஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் போன்ற அனைவரும் இலங்கையில் மிகவும் பின்தங்கிய மக்களாக பெருந்தோட்ட மக்களை அடையாளம் காட்டிவிட்டுச் சென்றுள்ளனர்.

இலங்கையை ஆசியாவில் உயர்ந்த இடத்துக்குக் கொண்டுசென்ற மக்களுக்கு இலங்கை அரசு இந்த மக்களுக்கு வழங்கிய பரிசு இதுதான். அத்துடன் பெருந்தோட்ட மக்களின் தேவைப்பாடுகள் குறைபாடுகள் தொடர்பாக இந்த நாடாளுமன்றத்தில் முழுநாள் விவாதத்தைநடத்திநாங்கள்எமது மக்களின் நிலைமையை உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தோம்.

அந்த விவாதத்துக்கு பின்னர் வெளிநாட்டு தூதுவர்கள் பலர் என்னை சந்தித்து, பெருந்தோட்ட மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பான மேலதிக விவரங்களைக் கேட்டறிந்துகொண்டார்கள்.

தமிழ் தேசிய முற்போக்கு முன்னணி 2015இல் நல்லாட்சி அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டிருந்தது. இந்திய அரசாங்கத்துக்கு கூட எமது மக்களின் நிலைமை தொடர்பாக சரியாக தெளிவு இருக்கவில்லை.

நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம்தான் எமது மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றே நினைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் நாட்டில் எங்கெல்லாம் எமது மக்கள் இருக்கிறார்கள் என்பதைநாங்கள்அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம்.

அத்துடன் வரவு செலவு திட்டத்தில் பெருந்தோட்ட அபிவிருத்திக்காக 4 பில்லியன் ரூபா நதி ஒதுக்கி இருப்பதாகவும் காணி உரிமை வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருப்பதை வரவேற்கிறோம்.

ஆனால்அதனைஎப்படியாவது அவரிடமிருந்து பிடிங்கி எடுக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில் ரணில் விக்ரமசிங்க தொடர்பில் எமக்க நன்கு தெரியும். சொல்லுவார் ஆனால் செய்யமாட்டார். வரும் என்பார் ஆனால் அது வராது.

நாங்கள் இங்கு குறை கூறினால் அது உங்களை அல்ல. ஜனாதிபதியைத்தான். நாங்கள் முரண்பட்டுக்கொள்ளத் தேவையில்லை. நாங்கள் வெளியில் இருந்து அழுத்தம் கொடுக்கிறோம். நீங்கள் உள்ளே இருந்து அழுத்தம் கொடுங்கள்.

அத்துடன் பெருந்தோட்ட மக்களுக்கு 10 பேர்ச் காணி வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். நாங்கள் 7 பேர்ச் காணி வழங்கினோம். நீங்கள் 3 பேர்ச் அதிகரித்து 10 பேர்ச் வழங்குவதாக தெரிவித்திருக்கிறீர்கள் அதனை நாங்கள் வரவேற்கிறோம்.

அதேபோன்று இந்திய நிதி அமைச்சர் 10 ஆயிரம் வீடுகளை வழங்குவதாகத்தெரிவித்திருந்தார். அந்த10ஆயிரம்என்பது2002இல் நாங்கள் இந்திய அரசாங்த்திடம் கேட்டுப்பெற்றவீடுகளாகும்என்றே நினைக்கிறோம்.

அதேபோன்று தோட்டத் தொழிலாளர்களை நில உரிமையாளர்களாக்குவோம் என்ற வாக்குறுதியை சஜித் பிரேமதாஸவின் ஜனாதிபதி கொள்கை விஞ்ஞாபனத்தில் வழங்கி இருக்கிறோம்.

அதேபோன்று நாடாளுமன்றத்தில் நாங்கள் கொண்டுவந்த ஒருநாள் விவாதத்தின் போதும் இந்திய வம்சாவளி தோட்ட மக்களுக்கு காணி உரித்துரிமை வழங்க வேண்டும் என்ற கோத்தை ஆளும் எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் அனைவரும் தெரிவித்தார்கள்.

அதுஎமக்குகிடைத்தவெற்றியாகும். எங்களுக்கு யாருடைய அனுதாபமும் தேவையில்லை, நீதியே தேவை என அன்று தெரிவித்தோம். அந்தக் கோரிக்கையை அமைச்சரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அத்துடன் 2015 இல் நல்லாட்சி அரசாங்கத்துக்குள் இருந்து பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டோம். அதில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் 6 பிரதேச சபைகளை உருவாக்க நடவடிக்கை எடுத்தோம். என்றாலும் எமது அரசாங்கம் தோல்வியுற்றதால் தற்போது அந்த நடவடிக்கை பூரணப்படுத்தப்படாமல் இருக்கிறது.

அதனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். அதேபோன்று தோட்டத் தொழிலாளர்களுக்கு தனி வீடு கட்டவேண்டும் என்ற கோரிக்கையையும் நாங்கள் தான் ஆரம்பித்தோம்.

தமிழ் கிராமங்களை அங்கு உருவாக்கினோம். மலையக மக்களுக்கான அதிகாரசபையை ஏற்படுத்தினோம். ஆனால் அந்த அதிகாரசபைகள் எவையும் இல்லை. இவ்வாறு பல வேலைத்திட்டங்களைசெய்தோம். அந்த வேலைத்திட்டங்கள் அனைத்தையும் சபையில் சமர்ப்பிக்கிறேன். - என்றார். (05)

# வீட்டு வாசலுக்கே வெளிநாட்டுப் பொருள்களை அனுப்புவது சுங்கத்தால் உடன் இடைநிறுத்தம்

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு பொருள்களை வீட்டு வாசலுக்கே அனுப்பும் டோர் ரூ டோர் முறையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு இலங்கைச் சுங்க திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாட்டினர் இம்முறையின் மூலம் இலங்கைக்கு பல்வேறு பொருள்களைஅனுப்புவதுடன், குறித்த பொருள்கள் தனியார் போக்குவரத்து முகவர் நிலையங்கள் மூலம் நேரடியாக குறித்த நபர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

எவ்வாறாயினும், பொதுமக்களின் தொடர்ச்சியானமுறைப்பாடுகள்மற்றும் அதன் ஊடாக மேற்கொள்ளப்படும் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு, இந்த விநியோக முறையை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

எவ்வாறாயினும், டிசெம்பர் முதலாம் திகதி முதல் அனுப்பப்படும் பொருள்களை இலங்கை சுங்கத்தின் சாதாரண முறையின் மூலம் இலங்கைக்கு அனுப்ப முடியும்.

மேலும், கடந்த மூன்று நாள்களில், டோர் ரூ டோர் மூலம் பொருள்கள் மற்றும் சேவை விநியோக முறையின் மூலம் சுமார் 20 கிலோகிராம் போதைப்பொருள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக சுங்க அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

வெளிநாட்டு போதைப்பொருள் கடத்தல்காரர்களால் தற்போது போதைப்பொருள் விநியோகம் இந்த முறையின்ஊடாகஇடம்பெறுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன என இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் முறையான சீர்திருத்த வேலைத்திட்டத்திற்கு உட்பட்டு அடுத்த வருடம் மீண்டும் குறித்த முறைமையை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (05)

# இஸ்ரேலுக்கு வேலைவாய்ப்புக்காக அனுப்புதல்: இனவாத கருத்துகளை முன்வைக்கவேண்டாம்!

## மனுநாணயக்கார கூறுகிறார்

இஸ்ரேலுக்கு வேலைவாய்ப்புக்கு இலங்கையர்களை அனுப்பும் விடயத்தில் இனவாதக் கருத்துக்களை முன்வைக்க வேண்டாம். இன,மத ரீதியில் கட்சிகளின் பெயர்களை வைத்துக்கொண்டு இவ்வாறு செயற்பட வேண்டாம் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது இலங்கையிலிருந்து 10000 தொழிலாளர்கள் இஸ்ரேலுக்கு வேலைவாய்ப்புகளுக்கு அனுப்பப்படவுள்ளமை தொடர்பில் விசேட கூற்றை முன்வத்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

இலங்கையின் வெளிநாட்டு கொள்கையின்படி நாம் ஓர் அணிசேரா நாடு. இஸ்ரேல்-காசா யுத்தத்தை நாம் எதிர்க்கின்றோம். இதற்காக ஐ.நாவில் கூட நாம் குரல்கொடுத்துள்ளோம்.

இலங்கையிலிருந்து அரேபிய நாடுகளுக்கு பலர் வேலை வாய்ப்புகளுக்குசெல்கின்றனர். அதேவேளை ஏதாவது ஒரு நாடு எம்மிடம் தமது நாட்டுக்கான தொழிலாளர்களை கேட்கும்போது நாம் இன ,மத ரீதியாக செயற்பட முடியாது.

இஸ்ரேல் - காசா யுத்தம் ஆரம்பித்த போது தொழிலாளர்களின் பாதுகாப்புக் கருதி தொழிலாளர்களை அங்கு அனுப்புவதைத் தற்காலிகமாக இடை நிறுத்தியிருந்தோம். தற்போது இஸ்ரேலுக்கு அனுப்பவுள்ள தொழிலாளர்களுக்குஇராணுவப்பயிற்சி அளிக்கப்படுவதாகக் கூறப்படுவதில் எந்த உண்மையும் கிடையாது. இஸ்ரேலால் காஸாவில் பிடிக்கப்பட்ட இடங்களுக்கு இவர்கள் தொழிலுக்கு அனுப்பப்பட மாட்டார்கள்.

எனவே இஸ்ரேலுக்கு இலங்கையிலிருந்து தொழிலாளர்களை அனுப்பக்கூடாது. இனவாதக் கருத்துக்களை முன்வைக்க வேண்டாம். இன,மத ரீதியில் கட்சிகளின் பெயர்களை வைத்துக்கொண்டு இவ்வாறு செயற்பட வேண்டாம். - என்றார். (05)

# சந்தேகநபரை துரத்திச்சென்றபோது உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தருக்குப் பதவி உயர்வு



சந்தேகநபரைத் துரத்திச்சென்றபோது உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு பொலிஸ் சார்ஜன்ட்டாக பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித் துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஜா-எல பகுதியில் கைவிலங்குடன் நீரோடையில் குதித்து தப்பிச் செல்ல முயன்ற சந்தேக நபரை துரத்திச் சென்றபோது நீரில் மூழ்கி மேற்படி பொலிஸ் உயிரிழந்தார்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரான கிருஷ்ணமூர்த்தி பிரதாபன் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி, பின்னர் ஜா-எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்தவர் ஆவார். (05)

# தொழிலுக்காக இலங்கையர்களை இஸ்ரேலுக்கு அனுப்பி தேவையற்ற பிரச்சினைகளுக்கு வழிவகுக்க வேண்டாம்

## ஹக்கீம் கோரிக்கை

இஸ்ரேலுக்கு தொழில் வாய்ப்புக்களுக்கு இலங்கையர்களை அனுப்புவதன் மூலம் அங்கு உயிரிழப்புகள் ஏற்பட்டால் அது எமது நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளைத் தூண்ட காரணமாக அமையலாம். அத்துடன் இந்த விடயத்தில் அரசாங்கம் அரபு நாடுகளைக் கண்டுகொள்ளாது சந்தர்ப்பவாதமாகசெயற்படக்கூடாது. அதனால் இலங்கையர்களை தொழிலுக்கும் அனுப்பும் விடயத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

காஸாவில்பாரிய மனித உரிமைமீறல்மற்றும் யுத்தக்குற்றங்கள் இடம்பெற்றுவரும் நிலையில் அதேநேரம் லட்சக்கணக்கான இலங்கை தொழிலாளர்கள் அரபு நாடுகளில் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் இலங்கையில் இருந்து இஸ்ரேலுக்கு தொழிலாளர்களை அனுப்ப நடவடிக்கை எடுத்திருப்பது கவலைக்குரிய விடயம். அதேநேரம் இவ்வாறு அனுப்பப்படும் இலங்கையர்களுக்கு அங்கு இராணுவ பயிற்சிவழங்குவதற்கானதிட்டமும்இருக்கிறது.

அத்துடன் யுத்தம் காரணமாக காஸாவில் இருக்கும் தொழிலாளர்கள் அங்கிருந்து வெளியேறி வரும் நிலையில் அங்கு ஏற்பட்டு வரும் தொழில் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க இருப்பதுடன் பலஸ்தீனர்களிடமிருந்து பலவந்தமாக பறித்துக்கொண்ட காணிகளில் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கே இலங்கையர்களுக்கு இந்த தொழில் வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதுதான் உண்மை நிலை. அதனால் இதுதொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் எமது அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை பிழையான நேரத்தில் மேற்கொள்ளப்படும் பிழையான தீர்மானம் என அரபு நாடுகளின் பல தூதுவர்கள் என்னிடம் தெரிவித்திருந்தார்கள். தென்னாபிரிக்க ஜனாதிபதி, பிரேஸில் ஜனாதிபதி ஆகியோர் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை துண்டித்துக்கொள்ளநடவடிக்கைஎடுத்துவரும் இந்த நிலையில், நாங்கள் உணர்வுபூர்வமானஇந்தவிடயம்தொடர்பாகக்கவலையுடன் பார்க்க வேண்டும்.

அரபு நாடுகள் இஸ்ரேல் தொடர்பாகக் கலந்துரையாடி வரும் நிலையில் நாங்கள் சந்தர்ப்பவாதிகளாகச் செயற்படக்கூடாது. ஜேர்மனில் ஹிட்லர், யூதர்களைக் கொலை செய்தபோது அங்கு இடம்பெற்ற வெற்றிடங்களுக்கு இலங்கையர்களை அனுப்பும் நடவடிக்கையாகவே இதனை நான் காண்கிறேன். அதனால் இலங்கையில் இருந்து இஸ்ரேலுக்கு தொழிலுக்கு அனுப்பும் விடயத்தை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

அத்துடன் தொழிலுக்கு செல்பவர்களுக்கு அங்குஇராணுவபயிற்சிகள்வழங்கப்படுவதன் மூலம் இந்த நாட்டில் வேறுவிடயங்களும் இடம்பெறக்கூடும். இஸ்ரேலில் பணிபுரிந்துவந்த இலங்கையர்கள் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பில் எமது கவலையை தெரிவித்துக்கொள்கிறோம். எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்கள் ஏற்பட்டால், அது எமது நாட்டில் தேவையற்ற தூண்டல்கள் ஏற்படலாம். அதனால் அரபு நாடுகள்லட்சக்கணக்கானவர்களுக்குதொழில் வாய்ப்புக்களை வழங்கிக்கொண்டிருப்பதைக் கண்டுகொள்ளாது இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன். - என்றார். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாவீரர் நாள் அஞ்சலி எது?

இன்று மாவீரர் நாள். தமிழ் மக்களுக்காகத் தன்னலமற்ற ஈகத்தைப் பொழிந்தவர்களை நினைவேந்தும் நாள். கடும் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் தமிழர் தாயகத்திலும் உலகெங்கும் தமிழர்கள் பரந்து வாழும் இடங்களிலும் இன்றைய நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது.

2009க்கு முன்னர் தேசிய நிகழ்வாக இந்த நாள் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் சுமார் 6 வருடங்கள் அதனை மீட்டுருவாக்கம் செய்வதற்கான முயற்சிகளிலும் போராட்டங்களிலும் கழிந்தது. 2015 முதல் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்வதற்கு எந்தத் தடைகளும் விதிக்கப்படமுடியாது என்பதின் கீழ் மாவீரர் துயிலும் இல்லங்களில் மீண்டும் நிவேந்தல்கள் இடம்பெறத் தொடங்கின.

2016ஆம் ஆண்டில் நிகழ்வுகள் எழுச்சியுடன் ஆளும் தரப்பின் இடையூறுகள் இன்றி இடம்பெற்றன. ஆனால், சிங்களப்பேரினவாதக்கட்டமைப்புக்குஅது உவப்பானதாக இல்லை. குறிப்பாகப் படைத்துறையினருக்கு, பாதுகாப்புத் தரப்பினருக்கு இந்த நிகழ்வுகள் கசப்பு மிக்கவையாகத் திகழ்கின்றன. தங்களால்வெற்றிகொள்ளப்பட்டவர்களைத் தங்கள் கண்முன்னேயே போற்றித் துதிக்கும் இந்த நிகழ்வை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எதிரியாயினும் உயிரிழந்தவர்களை மதிக்கும் சகிப்புத்தன்மையை அவர்கள் இன்னும் பெறவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

அதனால் 2019 முதல் மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு இடையூறுகளை விளைவிக்கும் முயற்சிகளில் படைத் தரப்பினர் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்றனர். நீதிமன்றங்கள் மூலம் இந்த நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கக் காவல்துறையினர் தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர். நினைவுத்தூபிகளைச் சேதப்படுத்துவது, நிகழ்விடங்களில் ஏற்பாடுகளைச் சிதைப்பது என்று அவர்களின் அட்டூழியங்கள் தொடர்கின்றன. அவற்றையெல்லாம் மீறித்தான் இன்று மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்தவேண்டியிருக்கின்றது.

அவ்வளவு பாடுகளைச் சுமந்து, முயற்சிகளை எடுத்து நடத்தப்படும் இந்த நிகழ்வுகள் ஒரு சடங்காக நிலைநிறுத்தப்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்வது முக்கியம். மாவீரர் நாளில் மாலை நேரத்தில் நினைவேந்தல் செய்வது ஒரு சடங்கு என்கிற நிலைமை ஏற்படுத்தப்பட்டுவிடக்கூடாது. மாவீரர் நாள் அதனையும் தாண்டிய உணர்ச்சிமிக்க ஒரு தமிழ்த் தேசிய நிகழ்வாக பரிணமிக்க வைக்கப்படவேண்டும்.

விடுதலைப்புலிப்போராளிகள், கொண்டகொள்கையின் பற்றுறுதிக்கும், தன்னலமற்ற அர்ப்பணிப்புக்கும், தியாகத்திற்கும், இலக்கு நோக்கிய விட்டுக்கொடாத் தன்மைக்கும், நேர்மைக்கும் உதாரணமானவர்கள். ஆங்காங்கே தவறுகள் நடந்திருக்கலாம், ஆனால் அடிப்படையில் போராளிகளின் உன்னத நோக்கம் அதுவாகத்தான் இருந்தது. அவர்கள் அப்படித்தான் வளர்த்தெடுக்கப்பட்டார்கள். எனவே அந்த நற்குணங்கள் அனைத்தையும் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கடத்தும் தேசிய நிகழ்வாக மாவீரர் நாள் நிகழ்வுகள் கட்டமைக்கப்படவேண்டும்.

மாவீரர்களின் பெயர்களை மனதிருத்துவது மட்டும் இந்த நாளின் நோக்கமாக இருக்கக்கூடாது. அவர்களின் தன்னலமற்ற தியாகங்கள் போற்றப்படவேண்டிய அதே தருணத்தில், அந்த நற்பண்புகள் எதிர்காலச் சந்ததியினருக்குக் கடத்தப்படுவதும் முக்கியம். தமிழ்த் தேசியக் கட்டமைப்பதற்கும், சீர்ப்படுத்துவதற்கும் அது அவசியம்.

2009க்குப் பின்னர் மாவீரர் நாளை பகிரங்கமாக நினைவேந்த ஒரு போராட்டம், 2015இன் பின்னர் மாவீரர் வாரத்தை மீட்டுருவாக்கம் செய்வதற்கான போராட்டம் என்கிற வரிசையில் தமிழ்த் தேசியத்தைக் கட்டமைக்கின்ற தேசிய நிகழ்வாக மாவீரர் நாளை வடிவமைப்பதற்கான போராட்டமாக இனி வரும் காலங்கள் அமையவேண்டும்.

அதுவே நாம் அனைவரும் அந்தத் தன்னலமற்ற தியாகிகளுக்குச் செய்யும் மிகச் சிறந்த அஞ்சலியாக இருக்கும்.




# ‘ஒப்பரேஷன் என்டபே’ அதிரடி மீட்பு

## பாலஸ்தீன போரில் பணயக் கைதிகள் விவகாரம்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

(1976இல் ஒப்பரேஷன் என்டபே -Operation Entebbe-பணயக் கைதிகள் விடுவிப்பு நடவடிக்கையில் தளபதியான யோனாதன் நேத்தன்யாஹூம் கொல்லப்பட்டார்.

இவர் வேறுயாறும் அல்லர், இன்றைய இஸ்ரேலின் பிரதம மந்திரியான பெஞ்சமின் நேத்தன்யாஹூவின் அண்ணன் ஆவார்)




ஒன்றரை மாதத்தை எட்டியுள்ள நிலையில் காசா போரை தற்காலிகமாக நிறுத்துவதற்கு கட்டார் அரசின் இராஜதந்திரத்தாலும், மத்தியஸ்தத்தாலும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இஸ்ரேல் - ஹமாஸ் இடையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. ஹமாஸ் தன் வசம் உள்ள பணயக் கைதிகளை விடுவித்து வருகின்றது. பதிலுக்கு இஸ்ரேல் தன் வசம் உள்ள பலஸ்தீனர்களை விடுவித்து வருகின்றது.

### பயணக் கைதிகள் விடுதலை?

ஹமாஸ்அமைப்பால்பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ள இஸ்ரேலிய பொதுமக்களில்



ஐம்பது பேர் நான்கு நாட்களுக்குள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் இக்காலக்கட்டத்தில் போர் தற்காலிகமாக நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நான்கு நாள் சண்டை நிறுத்த ஒப்பந்தம் போரை முழுமையாக முடிவுக்கு கொண்டுவர வழிவகுக்கும் என்று கத்தார் பிரதமர் முகமது பின் அப்துல் ரஹ்மான் பின் ஜாசிம் அல்தானி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கட்டார் அரசின் இராஜதந்திரத்தாலும், மத்தியஸ்தத்தாலும் மேலும் பணயக் கைதிகளை விடுவித்து, முழுமையான போரைத் தடுக்க முடியுமா என்பதனை இனிவரும் நாட்களிலேதான் பார்க்க முடியும்.

### யோம் கிப்பூர் போருக்குப் பின் இழப்பு

ஹமாஸ் வசமுள்ள பயணக் கைதிகள், உலகின் மிக அதிக மக்கள்தொகைகொண்டஇடங்களில் ஒன்றான காசா பகுதியில் உள்ள ஹமாஸ் மறைவிடங்களில் வைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. இவர்களை மீட்க ஹமாஸுக்கு எதிராகப் போரிடுவதற்காக இஸ்ரேல் இராணுவத்திலிருந்து வெளியேறிய சுமார் 300,000 பேர் மீண்டும் இணைந்துள்ளனர் என இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஒக்டோபர் 7இல் பல இஸ்ரேலியபொதுமக்கள்பணயக் கைதிகளாக எல்லையைத் தாண்டி காசாவிற்குள் கொண்டு



செல்லப்பட்டனர். ஹமாஸின் தரை, வான் மற்றும் கடல்வழி தாக்குதல்களில் பொதுமக்கள், ராணுவத்தினர் என குறைந்தது 1500 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதாக அந்நாட்டு அரசு உறுதிப்படுத்தியது. 2,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

யோம் கிப்பூர் போருக்குப் பிறகு இஸ்ரேலில் நடந்த பாரிய இழப்பாகும்.

இஸ்ரேலும் அமெரிக்காவும் பிணைக்கைதிகளை விடுவிக்க தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வதாக சபதம் செய்தன. தற்போது காசா பகுதியில் ஹமாஸுக்கு எதிரான தரை வழி தாக்குதல் தீவிரம் அடைந்து ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

### ஜெர்மனி முயுனிச் ஒலிம்பிக்ஸ் பணய விவகாரம்

பாலஸ்தீன விடுதலை அமைப்புகள் இஸ்ரேலின் மீது நீண்ட காலமாகத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. குண்டு வைப்பது, ராக்கெட்டை ஏவி தாக்குவது என அனைத்தையும் கையாண்டன. இஸ்ரேல் எதற்கும் சளைக்கவில்லை. பாலஸ்தீன அமைப்புகளின் தீவிரவாத தாக்குதல்களைத் திறம்பட எதிர்கொண்டது. உலகிலேயே சிறந்த உளவுப்படை எதுவென்றால் அது இஸ்ரேல் நாட்டின் மொசாட் என நீண்ட காலமாக விளங்கியது.

பாலஸ்தீன அமைப்புகளால் வெளிநாடுகளிலும் இஸ்ரேலியர்களின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. 1972ஆம் ஆண்டு ஜெர்மனி நாட்டில் முயுனிச் (Munich) நகரத்தில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸ் போட்டியில் கலந்துகொள்ளச் சென்ற 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களை கறுப்பு செப்டெம்பர் (Black September) என்ற பாலஸ்தீனிய இயக்கதைச் சேர்ந்தவர்கள் பணயக் கைதிகளாகப் பிடித்துப் பின்னர் கொல்லப்பட்டனர்.

(13ஆம் பக்கம் பார்க்க..)

# நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த சிங்கள இளைஞர்களே முன்வருக

## சிறிதரன் எம்.பி. அழைப்பு

ஈழத்தமிழர்களின் நெடுங்கால மரபுகளின் வழி இம்முறையும், இனிவரும் காலங்களிலும்எமது உறவுகள்புதைக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று மரியாதை செலுத்தி வழிபடுவதன் மூலம் எங்களை நாங்களே ஆற்றுப்படுத்திக் கொள்கின்ற நினைவேந்தல் நிகழ்வுகளை இராணுவத் தலையீடுகளோ, பொலிஸாரின் அச்சுறுத்தல்களோ அற்று அமைதியான வழியில் கடைப்பிடிப்பதற்கு வழிவகை செய்வதன்மூலம் இந்த நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முன் வாருங்கள் என்று சிங்கள இளைஞர், யுவதிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் அழைப்பு விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

இனி ஒருபோதும் யுத்தத்தை விரும்பாத எமது மக்கள், பயங்கரவாதம் எனப்படுகின்ற இயல்புகளுக்கு ஒத்திசையாத வகையில் தங்களின் பிள்ளைகளை, அவர்கள் புதைக்கப்பட்ட நிலங்களில் சென்று வழிபடுவதற்கும், விளக்கேற்றுவதற்கும், கண்ணீர்விட்டு அழுவதற்குமான சந்தர்ப்பங்களைத் தடுக்கும் வகையில் அச்சுறுத்தல்களும், விசாரணைகளும் பரவலாக அரங்கேற்றப்படுகின்றன.

போர் முடிவுற்று 13 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள 27 மாவீரர் துயிலும் இல்லங்களில், யாழ்ப்பாண மாவட்டத்தின் கொடிகாமம், எள்ளங்குளம், கோப்பாய் ஆகிய துயிலும் இல்லங்கள், கிளிநொச்சி மாவட்டத்தின் தேராவில் துயிலும் இல்லம், முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை, ஆலங்குளம், அளம்பில், நெடுங்கேணி களிக்காடு மற்றும் மணலாறிலுள்ள உதயபீடம், கோடாலிக்கல் புனிதபூமி ஆகிய துயிலும் இல்லங்கள், வவுனியா ஈச்சங்குளம் துயிலும் இல்லம்,மட்டக்களப்பு தாண்டியடி துயிலும் இல்லம் ஆகிய பன்னிரண்டு மாவீரர் துயிலும் இல்லங்கள் இன்றுவரை இராணுவப் படை முகாம்களாக முற்றுகையிடப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு சூழலில், தமது பிள்ளைகளின் கல்லறைகள் அத்தனையும் போரியல் மாண்புக்குப் புறம்பான வகையில் இடித்தும், பெயர்த்தும் அழிக்கப்பட்ட பின்னரும், அந்தக் கல்லறைகள் நிறைந்திருந்த துயிலும் இல்லங்களைத் தமது புனிதபூமியாக எண்ணியே தமிழர்கள் இன்றளவும் பூசிக்கிறார்கள். திரும்பும் திசையெல்லாம் ஆக்கிரமிப்பின் கால்கள் ஆழ வேரூன்றிப் போயிருக்கும் தமிழர் தாயகத்தில், இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட துயிலும் இல்லங்கள் மீதான ஆக்கிரமிப்பும், வழிபாட்டுரிமை மீதான தடையும் மீளவும் வலிந்து ஏற்படுத்தப்படக் கூடும் என்ற



அடிப்படையிம் மக்களிடையே ஆழப்பதிந்திருக்கும் அரசு மீதான நம்பிக்கையீனமும் துயிலும் இல்லத்தின் புனிதத்துவத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் அவர்களுக்கிருக்கும் ஆத்ம எதிர்பார்ப்பும் அத்துயிலும் இல்ல வளாகங்களை எல்லைப்படுத்துவதிலும் அலங்கரிப்பதிலும் ஆர்வத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அத்தகைய மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய காலத்தின் தேவை கருதியும் துயிலும் இல்ல மரபுகளுக்கமையவும் கனகபுரம், முழங்காவில், வன்னிவிளாங்குளம் ஆகிய மூன்று துயிலும் இல்லங்களினதும் நுழைவாயில் முகப்புகளை, அரை நிரந்தரமானவையாக நிறுவியிருக்கிறோம்.

எமக்கெதிராக அரசு பூசமுற்படுகின்ற பயங்கரவாத முலாம் குறித்த எந்தக் குறியீடுகளும் அவற்றில் காட்சிப்படுத்தப்படவில்லை. ஆனால் போரை நினைவுபடுத்துகின்ற-நல்லிணக்கத்தைச்சீர்குலைக்கின்ற - எந்தவொரு அடையாளங்களும் இல்லாத வெற்று முகப்புகளை நிறுவியமைக்காக, இதுவரை நான் உட்பட 13 பேர் பொலிஸாரால் தனித்தனியே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளோம்.தமிழர்களின் பூர்வீக மண்ணை ஆக்கிரமித்த நூறு வீதம் தமிழ் மக்களின் புழக்கம் செறிவாக உள்ள தமிழர் தாயகப் பகுதிகளின் பெருநகரங்களிலும் பிரதான வீதிகளிலும் ஏராளமான போர் வெற்றிச் சின்னங்கள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளன.

அடிப்படைஉரித்துக்கோரிப்போராடியவோர் இனத்தைத் தோற்கடித்துவிட்டோம் என்கிற மமதையையும், போரின் குரூரத்தையும், படையினரது ஆக்கிரமிப்புச் சிந்தையையும் முகத்திலறைந்தாற்போல் பிரதிபலிக்கும் ஆயுத கலாசார நினைவுச்சின்னங்கள் சீர்குலைக்காத இன நல்லிணக்கத்தை அவை நினைவுபடுத்தாத போரியல் உணர்வுகளை நினைவேந்தல் உரித்தை நிலைநாட்டுவதற்காக அமைத்த துயிலும் இல்ல முகப்புகள் சீர்குலைக்கும் என்று சிந்திப்பதுகூட ஆக்கிரமிப்பின் அதியுச்ச வெளிப்பாடாகவே தென்படுகிறது.

எனவேஎங்களைநாங்களேஆற்றுப்படுத்திக் கொள்கின்ற நினைவேந்தல் நிகழ்வுகளை இராணுவத் தலையீடுகளோ, பொலிஸாரின் அச்சுறுத்தல்களோ அற்று அமைதியான வழியில் கடைப்பிடிப்பதற்கு வழிவகை செய்வதன்மூலம் இந்த நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த சிங்கள இளைஞர், யுவதிகள் முன் வரவேண்டும். - என்றார். (05)

## கொஸ்லந்தயில் நீரில் அடித்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் ஓட்டுநரின் சடலம் மீட்பு

*கொஸ்லந்த - அலுத்வெல பிரதேசத்தில் அலுத்வெல பாலத்தில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபர் கடந்த 22 ஆம் திகதி நீரில் அடித்து செல்லப்பட்ட நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு நீரில் அடித்துச் செல்லப்பட்டவர் ஹபுத்தளை பிரதேசத்தை சேர்ந்த 56 வயதுடையவராவார்.*

*இவ்வாறு இறந்தவர் அலுவலக பணியை முடித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது நீரில் அடித்து செல்லப்பட்ட நிலையில் அவரது மோட்டார்சைக்கிள்பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)*


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலுமு, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
தொடர்புகளுக்கு: 0777 43 5557
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chilline Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மலையக மக்களின் முன்னேற்றத்துக்கான சகல தீர்மானங்களுக்கும் இனி ஒத்துழைப்பு

## சிறிதரன் எம்.பி. உறுதியளிப்பு



முன்னாள் ஜனாதிபதி ஜே .ஆர்.ஜெய-வர்த்தன தலைமையிலான அரசின் திட்டமிட்ட இனப்படுகொலையிலும் ,ஈழ விடுத லைப் போராட்டத்திலும் பெரியளவில் தங்களைத் தியாகம் செய்த மலையக மக்கள் தான் இலங்கையின் பொருளாதாரத்தை இன்றும் காப்பாற்றிக் கொண்டிருப்பவர்கள். எனவே அவர்களுக்கான காணி உரிமை,சம்பள அதிகரிப்புக்கள் உடனடியாக வழங்கப்பட வேண்டும். மலையக மக்களுக்காக எடுக்கப் படும் சகல தீர்மானங்களுக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளு மன்ற எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு வசதி கள் அபிவிருத்தி அமைச்சுக்கான செலவுத்த லைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

1983 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இராணுவத்திற்கு எதிராக முதலாவதாக நடந்த கண்ணி வெடித் தாக்குதலுக்காக மலையகத்தில் 2000 பேர் கொல்லப்பட்டார்கள். பல ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயரப்பட்டார்கள். அவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட் டங்களுக்கு இரவோடு இரவாக கலைக்கப்பட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் தான் கண்ணி வெடி வெடித்தது. மலையகத்திலிருந்த மக்கள் என்ன செய்தார்கள்?அப்போது ஜனாதிபதியாகவிருந்த ஜே .ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான அரசு நீண்டகாலமாக திட்டமிட்டிருந்த தன்னுடைய இன ரீதியான செயற்பாட்டை செயல்படுத்துவதற்கு அப்போதிருந்த சிறில் மத்யு,அத்துலத் முதலி, காமினி திசாநாயக்க போன்றவர்களின் தலைமையில் மிகப்பெரிய இனப்படுகொலையை 83 இல் கட்டவிழ்த்து விட்டது.

இவ்வாறான திட்டமிட்ட இனப்படு கொலையில்,ஈழ விடுதலைப் போராட்டத்தில் மிகப்பெரியளவில் தங்களை உயிர்களை தியாகம் செய்தவர்கள் மலையகத்து மக்கள். மலையகத்தில் வாழும் மக்கள் அநியாயமாக கொல்லப்பட்டார்கள். அங்கிருந்து கலைக்கப்பட்டார்கள்.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் 10000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.ஆனால் இன்றும் தோட்டங்களில் வேலைசெய்கின்ற எமது சகோதர உறவுகளின் நாட் சம்பளம் 600 ரூபாவை தாண்டிப்போக முடியாமல் உள்ளது. அவர்களின் வாழ்க்கையை யோசித்துப் பாருங்கள். இந்த 600 ரூபா ஒரு நாள் சம்பளத்துடன் எப்படி அந்த மக்கள் வாழ முடியும்?தமது பிள்ளைகளுக்கு எப்படி கல்வியை வழங்க முடியும்?சுகாதாரத்தை, போக்கான உணவை எப்படி வழங்க முடியும்?

இந்த நாட்டில் மிக மோசமாக ஏமாற்றப்படுகின்ற சமூகமாக மலையக உறவுகள் உள்ளனர். அந்த மக்களின் சம்பளத்தை அரசால் ஏன் அதிகரிக்க முடியாமல் உள்ளது? அவர்களுக்கு ஒரு போனஸ-ாக கூட சம்பளத்தை அதிகரித்து வழங்கலாமே? 10 பேர்ச் காணி கொடுத்து ஒரு வீடு கட்டு வதற்கு கூட ஒரு முழுமையான திட்டம் அரசிடம் இல்லை. அந்த மக்களில் பலருக்கு இன்னமும் சொந்தக் காணி இல்லை.

அண்மையில் கூட அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் மலையகம் 200 ஆண்டுகள் நிறைவு விழா கொண்டாடப்பட்டது. அந்த மக்களின் வியர்வையிலும் கண்ணீரிலும் இரத்தத்திலும் தான் அந்த 200 ஆண்டுகள் கடந்துள்ளன . இலங்கையை வருமானமுள்ள நாடாக மாற்றியவர்கள் எமது மலையக சகோதரர்கள். இன்று இளம்தலைவராக ஜீவன் தொண்டமான் அந்த மக்களுக்கு தலைமை தாங்குகின்றார். இங்குள்ள ஏனைய மலையகம் சார்ந்த சகோதர உறுப்பினர்களின் ஒற்றுமை அந்த மக்களுக்கு பலமாக அமைய வேண்டும். அந்த மக்களுக்கு இந்த அரசு 2 ஏக்கர் காணி கொடுக்கத் தயாரா? ஏன் உங்களிடம் காணி இல்லையா? அவர்களுக்கு காணி வழங்க? அரசு ஏன் தயங்குகின்றது?

மலையகத்தை சேர்ந்த ஆசிரியர்களுக்கு நீண்ட இழுபறிகளுக்கு பின்னரே சம்பள உயர்வு வழங்கப்படுகின்றது?ஏன் இந்த பாரபட்சம்?அந்த மக்கள் இந்த மண்ணுக்கு உழைத்தவர்கள்.இரத்தம்,வியர்வை சிந்தியவர்கள். இலங்கையின் பொருளாதாரத்தை இன்றும் காப்பாற்றிக்கொண்டு இருப்பவர்கள் மலையக மக்கள். அந்த மக்களின் நாட் சம்பளத்தை ஆகக்குறைந்து 1200 ரூபாவாகவேனும் அதிகரிக்க வேண்டும்.தமது மக்களின் அபிவிருத்தியில் உரிமையில், பொருளாதாரத்தில் மலையகத்தை மையப்படுத்திய தலைவர்கள் விழிப்பாக இருப்பார்கள் .நாங்களும் அவர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவோம். - என்றார். (05)

# கொழும்பு தேசிய வைத்தியசாலை கதவுகளை திருடிய இருவர் கைது

*கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 4 லட்சம் ரூபா பெறுமதியான 7 அலுமினியக் கதவுகளை திருடிய இருவர் மருதானை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் பதுளைபிரதேசத்தை சேர்ந்த 27 மற்றும் 31 வயதுடைய கூலி வேலை செய்யும் நபர்களாவர். இந்தத் திருட்டுச்சம்பவம் தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரியின் முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்த பொலி-ஸார் குறித்த சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத் தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்க உத்தர விடப்பட்டதாக மருதானை பொலி-ஸார் தெரிவித்தனர். (05)*



காலைக்கதிர் Kalaikkathir

## நாட்டின் நீர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கையை நிராகரிக்கும் வகையில் நாட்டின் நீர் வளத்தினையும் விற்கும் செயற்பாடானது மக்களின் குரல் வளையை நசுக்குவதாகும்.

தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும், ராஜபக் ஷக்களும், விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரும் இணைந்துதண்ணீரைவிற்பனை செய்வதற்கே நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். அதனைப் புதிய சட்டமூலம் அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.

இந்த நாடு ரூபாக்கள் பற்றாக் குறை, டொலர்கள் பற்றாக்குறை ஆகியவற்றினால் வறிய நாடாக இருந்தாலும், நீர்வளத்தால் வறிய நாடாக இருக்கவில்லை. நீர் வளத்தால் இலங்கை உயர் மட்டத்தில் உள்ளது. இலங்கையில் உள்ள நீர் ஊற்றுக்களின் எண்ணிக்கை இதுவரையில் கணக்கிடப்படவில்லை.

ஆனாலும் நாட்டில் 3450 நீர் ஊற்றுக்கள் உள்ளதாக அரசு அடையாளப்படுத்தியுள்ளது. அவற்றை வரைபடத்தில் பொறித்து சில தனியார் நிறுவனங்கள் வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்று காண்பித்துள்ளன. அதன் அடிப்படையில் அந்த வளத்தினை பறித்தெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதனை ஒருபோதும் அனுமதிக்கவே முடியாது.

கடன்வாங்கி உண்டு மகிழ்ந் தமமை, விற்பனைகள் பாதிக்கப் பட்டமை, மோசடிகள் செய்து களியாட்டத்தினைச் செய்தமை உள்ளிட்ட விடயங்கள்தான் மோசமானவிளைவுகளைதற்போது ஏற்படுத்தியுள்ளது. இப்போது அதன் பாதிப்பை நிவர்த்தி செய்ய நீர் வளத்தினை விற்கப் பார்க்கிறார்கள் - என்றார்.

## அனைத்துக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணியினால்இலங்கைக்குஅந்நியச் செலாவணிகிடைப்பதைப்போன்றே நவீன விவசாய கைத்தொழில் மூலம்ஏற்றுமதிப்பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்.

இப்பிரதேச மக்களுக்கு காணி உரிமை வழங்குவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஆளும் கட்சி, எதிர்க்கட்சி வேறுபாடு இன்றி அனைவரும் இன்று இங்கு கூடியுள்ளனர். நாம் நாட்டுக்காக உழைக்க வேண்டும்.

நான் ஆட்சியைப் பொறுப் பேற்றபோது நாடு வீழ்ச்சிய டைந்திருந்தது. நாட்டைதற்போதைய நிலைக்கு கொண்டு வர முடியும் என்று யாரும் நினைக்கவில்லை. அடுத்த மாதத்துக்குள் நம் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபடப் போகிறது. சம்பந்தப்பட்ட நாடுகளில் இருந்து தேவையான பதில் அளிக்கப்பட்டுள்ளது. அது மட்டும் போதாது. எங்களுக்கு நிறைவேற்றுவதற்கு இன்னும் பல பணிகள் இருக்கின்றன.

முன்பெல்லாம் ஒரு கட்சியின் ஆதரவுடன் ஆட்சி அமைக் கப்பட்டுள்ளது. ஆனால், எனக்கு அனைத்துக்கட்சிகளின்ஆதரவையும் பெற வேண்டியிருந்தது. நாங்கள் அவ்வாறான ஒரு குழுவுடன் இந்த பயணத்தைத் தொடங்கினோம். அதில் நாம் அனைவரும் திருப்தியடையலாம்.

இந்தப்பொருளாதாரநெருக்கடிக்கு முகங்கொடுப்பதற்காக எமக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறுத்த வேண்டியிருந்தது. இப் போது வங்குரோத்து நிலை முடிந்து விட்டதால், தடைப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் தொடங்க எங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

அத்துடன், அனுராதபுரம் மாவட்டத்தில்மல்வத்துஓயாமற்றும் மகா விகாரை போன்றவற்றின் பணிகளைத் தொடங்கவும் திட்ட மிட்டுள்ளோம். குறிப்பாக மல்வது ஓயா என்பது சிங்கள நாகரிகம் தொடங்கிய இடமாகும். மகா விகாரை தேரவாத பௌத்தத்தின் மையமாகும். இந்த இரண்டு இடங்களையும் பாதுகாக்காமல் எந்த அபிவிருத்தியைச்செய்தாலும் பயனில்லை.

இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில்கிரிக்கெட்அபிவிருத்திக்காக ஒன்றரை பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. எதிர்கால வீரர்களைஉருவாக்கும்வகையில் கிராமப்புற பாடசாலைகளில் கிரிக்கெட்டை முன்னேற்றுவதே இதன் நோக்கமாகும்.

பொருளாதாரக் கட்டமைப்பில் மாற்றத்தை கொண்டு வந்துள்ளோம். சமுர்த்திக்குப் பதிலாக அஸ்வெசும திட்டத்தை உருவாக்கி, மக்களுக்கு வழங்கும் தொகையை மூன்று மடங்காக உயர்த்தினோம். விவசாயத்துக்காக வழங்கப்படும்பணம்விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டது.

விவசாயிகளுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்கவும், நகர்ப்புறங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாடகை அடிப்படையில் வாழும் மக்களுக்கு உறுதிப்பத்திரம் வழங்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.இங்குள்ள விவசாயிகளின் பெற்றோர்கள் 60களில் மலேரியாவால் பாதிக்கப்பட்டனர். அதன் பிறகு, பயங்கரவாத பிரச்சினைகளினால் அவதிப்பட்டனர். ஆனால் அவர்கள் விவசாயத்தை மறக்கவில்லை. நாட்டிற்குஅவசியமானஉணவைத் தொடர்ந்துஉற்பத்திசெய்துவந்தனர். அதற்காக நன்றி செலுத்தும் வகையில் காணி உறுத்தாவணம் வழங்கப்படுகிறது.

ஸ்வர்ணபூமி, ஜெயபூமி பத்திரங்களை வைத்துக்கொள்ள வேண்டுமானால் அப்படியே இருக்கலாம். காணிஉறுதிப்பத்திரம் பெற விரும்பும் எவரும் விண்ணப்பிக்கலாம். இந்தக் காணிஉறுதிப்பத்திரம்வழங்குவது அடுத்த ஆண்டு முதல் காலாண்டில் இருந்துநடைமுறைப்படுத்தப்படும்.

உலக வளர்ச்சியுடன், நாம் நவீன துறைகளுக்கு திரும்ப வேண்டும். நமது ஏற்றுமதித் துறையை முன்னேற்றுவதோடு விவசாயம்குறித்து,நவீனமுறையில் மீண்டும் சிந்திக்க வேண்டும். 1972இல் ஏற்றுமதி விவசாயத் தொழில் வீழ்ச்சியடைந்தது. இம்முறை வழங்கப்படும் காணி உரித்தாவணத்துடன், ஏற்றுமதி விவசாயத்தைமேம்படுத்துவதற்கான பணிகளைமேற்கொள்ளவேண்டும்.

இங்குவிளையும்பொருட்களை விநியோகிக்க கமநல சேவை மையங்களுக்கு பதிலாக கமநல நவீனமயமாக்கல் சேவை மையங்களை ஏற்படுத்த வேண்டும். பயிரிடப்பட்ட பயிர்களை பாதுகாத்து வைக்கும் திறன் மற்றும் தேவைப்பட்டால் ஏற்றுமதி செய்யும் திறன்ஆகியவற்றையும்தீர்மானிக்க முடியும்.

அடுத்த பத்து ஆண்டுகளில், உலக மக்கள் தொகை வேகமாக அதிகரிக்கும். தேவையான உணவை வழங்குவதன் மூலம், நீங்கள் அதிக அந்நிய செலாவணி சம்பாதிக்கலாம். அனைத்து கிராமங்களையும் ஏற்றுமதிக் கிராமங்களாக முன்னேற்றி ஏற்றுமதிப் பொருளாதாரத்துடன் ஒன்றிணைப்பதன் ஊடாக அதிக அந்நியச் செலாவணியை பெற முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

2024 வரவு செலவுத் திட்டத்தில் ‘உறுமய‘ காணி உறுதிப்பத்திரம் வழங்குவதற்காகஇரண்டுபில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டவர்கள்இலங்கையில் நிலங்களைக் கையகப்படுத்திய பின்னர், அந்த நிலங்களில் பயிரிடுவதற்கு பூர்வீக மக்களுக்கு உரிமம் வழங்கியிருந்தனர். ஆனால்1935ஆம்ஆண்டின்காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஊடாக உள்நாட்டவர்களுக்கு காணிஉறுதிகளை வழங்குவதற்கு மற்றொரு அனுமதிப் பத்திர முறை அறிமுகப்படுத்தப்பட்டது. காணியை வைத்திருப்போருக்குபயிர்ச்செய்கை மேற்கொள்ளவும்வீடுகளைகட்டவும் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் நிலத்தின்உரிமையை மற்றவருக்கு மாற்றவோ விற்கவோ அதிகாரம் வழங்கப்படவில்லை.

ஜயபூமி, சௌமிய பூமி, ஸ்வர்ணபூமி போன்ற அனைத்து காணி உறுதிகளுக்குப் பதிலாக காணி உறுதிப்பத்திரம் வழங்க 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில்ஜனாதிபதிரணில் விக்ரமசிங்க முன்மொழிந்துள்ளார்.

இதன்படி, 2024ஆம் ஆண்டு முதல் இந்த அனுமதிப் பத்திரங்களை வழங்கும் வேலைத்திட்டம்நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## பொலிஸ் மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவி நீடிப்புக் காலம் நிறைவுக்கு வந்த சி.டி.விக்கிரமரட்னவின் பதவிக் காலம் மார்ச் 25 நிறைவுக்கு வந்திருந்தது. எனினும் புதிய பொலிஸ் மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படாத காரணத்தால், அவருக்கு நான்கு தடவைகள் ஜனாதிபதியால் பதவி நீடிப்பு வழங்கப்பட்டது.

## பிரபாகரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழும்பூரில் அமைந்துள்ள மதிமுக தலைமை அலுவலகமான தாயகத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர்வேலுப்பிள்ளை பிரபாகர னின் 69வது பிறந்தநாள் விழாவை கொண்டாடப்பட்டது. மதிமுக கட்சித் பொதுச் செயலாளர் வைகோ பிரபாகரனின் படத்திற்கு மாலை அணிவித்துமரியாதைசெலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, இலங்கை தமிழர்களுக்காகப் போராடிய எங்கள் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்னும் எண்ணத்துடன்நாங்கள்செயற்பட்டு வருகிறோம்.

அண்ணன் பழ நெடுமாறன் போன்றோர் விடுதலை புலிகளுடன் பழ ஆண்டுகளாக இருந்தவர்கள். அவர்கள் யாரும் பொய் சொல்ல வேண்டிய என எந்த அவசியமும் கிடையாது. பிரபாகரன் திரும்பி வருவார் எனும் நம்பிக்கையுடன் நாங்கள் உள்ளோம். அவர் உயிருடன் இருக்கின்றார் என்பதே எங்களது கருத்து - என்றார்.

## சீதுவ பகுதியில் துப்பாக்கி சூடு

சீதுவ- கொட்டுகொட பகுதியில் இடம்பெற்றதுப்பாக்கிப்பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த நபரொருவரின் மீது மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் பயணித்த இனந்தெரியாத ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டுகொட பகுதியைச்சேர்ந்த 28 வயதான ஒருவரே துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் சிகிச்சை களுக்காகராகமவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்எனப்பொலிஸார் தெரிவித்தனர்.(05)

## மாவீரர்களின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கார்த்திகை மாதம் எம்மவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் மாதமாகும். அஞ்சலி செலுத்துவதற்குக்கூட இந்த நாட்டில் எமது இனத்துக்கு உரிமை இல்லையா?‘ - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



## எதிர்க் கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்குமாறு சபாநாயகரிடமும், சபை முதல்வரிடமும் வலியுறுத்தியுள்ளோம் என்றார் அவர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வுஒன்றில்கலந்துகொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சி என்ற ரீதியில் பலமாகச் செயற்படுகிறோம். அடுத்த மாதம் இடம்பெறவுள்ள கட்சியின் தேசிய மாநாட்டில் அரசியல் ரீதியில் முக்கிய தீர்மானங்களை அறிவிப்போம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கொள்கை ரீதியில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதும் எமது வேட்பாளரைநாங்கள்அறிவிப்போம். ஜனாதிபதியின் தீர்மானங்கள் நூற்றுக்கு நூறு வீதம் சிறந்தது என்று குறிப்பிட முடியாது. நாட்டில் மீண்டும் அரசியல் நெருக்கடி தோற்றம்பெறக்கூடாதுஎன்பதற்காக ஒன்றிணைந்து செயற்படுகிறோம். தேர்தல்அறிவிக்கப்பட்டவுடன்நாட்டு மக்கள் அரசியல் ரீதியில் தீர்மானம் எடுக்கலாம்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின்நாடாளுமன்றஉரை தொடர்பில் கடும் விமர்சனங்கள் காணப்படுகின்றன. சபைக்கு பொருந்தாத, வெறுக்கத்தக்க சொற்களை பயன்படுத்தி ஆளும் தரப்பின் உறுப்பினர்களைச் சாடுகிறார், ஆத்திரமூட்டும்வகையில் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவத்துக்குஎதிர்க்கட்சித்தலைவரே பொறுப்புக்கூற வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுங்கள் அல்லது எதிர்க்கட்சித் தலைவரின் நாடாளுமன்ற உரையை நேரலையாக ஒளிபரப்புவதை தாம தப்படுத்துமாறு சபாநாயகரிடமும், சபை முதல்வரிடமும் வலியுறுத்தியுள்ளோம் என்றார்.

## முள்ளிவாய்க்காலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)





முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் உள்ள கடற்கரை பகுதி ஒன்றில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைத்ததாக நம்பப்படும் இடம் ஒன்றினை நீதி மன்ற உத்தரவுக்கு அமைய தோண்டும் நடவடிக்கை நவம்பர் 23

தொடங்கப்பட்டது. நேற்றுமாலை வரை தொடர்ந்து இடம்பெற்றது.

முல்லைத்தீவு பொலிஸ் விசேட புலனாய் வாளர்களுக்குக் கிடைக்கப்பெற்ற தகவ லுக்கு அமைய நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டநகர்த்தல்பத்திரம்மூலம் இந்தத் தோண்டும் பணிக்கான அனுமதி பெறப்பட்டது.

விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மற்றும் பெறுமதியான பொருட்கள் இங்குபுதைதத்து வைக்கப்பட்டதாக நம்பப்ப டுகின்றது.

முல்லைத்தீவுநீதவான்நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில்பொலிஸார், விஷேட அதிரடிபடையினர், இராணுவத்தினர், கிராம சேவையாளர், தொல்லியல் திணைக் களத்தினர், சுகாதார பிரிவினர், தடயவியல் பொலிஸார்பிரசன்னத்துடன்குறித்த அகழ்வு பணி இடம்பெறுகிறது.




# போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்பு என தாயும் மகனும் கைது

போதைப்பொருள் வர்த்தகத்துடன்தொடர்புபட்டுபொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர்கள் இருவர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் வர்த்தகத்துக்கு உதவியமை மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்தின் மூலம் பெறப்பட்ட 5 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பணத்துடன் சந்தேக நபர்களான தாயும், மகனும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

பணக்கொடுக்கல்வாங்கல்கள் உட்பட வெள;வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கபெற்ற முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர்கள் பண்டாரகம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதுடன்சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்டவிசாரணைக்கு அமைய அவரது வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 5 கோடியே 11 லட்சத்து 12 ஆயிரத்து 900 ரூபா பணமும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் பண்டாரகம பிரதேசத்தில் உள்ள தனியார் வங்கி கணக்கிலத்துக்கு கோடிகணக்கில் பணம் வைப்பு செய்யப்படுவதாகவும் அந்த பணம் உடனடியாக ஏ.ரி.எம். இயந்திரத்தை பயன்படுத்தி மீள பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை குறித்த வங்கி கணக்கிலக்கம் போலியான தகவல்களை பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள்தடுப்புபிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# நீர்கொழும்பு முதல் யாழ். வரை சைக்கிளில் முதியவர் ஒருவர் சாதனைப் பயண முயற்சி

'சமாதான துவிச்சக்கரவண்டி பயணம்' என்ற தொனிப்பொருளில் 67 வயதுடைய நபர் ஒருவர் சனிக்கிழமை சைக்கிளில் நீர்கொழும்பு கொச்சிக்கடை பம்புக்குளிய தேவாலயம் முன்னாலிருந்து யாழ்ப்பாணம்நோக்கிய 24 மணிநேர சாதனை பயணத்தில் ஈடுபட்டு பலரது கவனத்தையும் ஈர்த்து வருகிறார்.

இச்சாதனையில் ஈடுபட்டுள்ள ரிச்சர்ட் பெர்னாந்து நுவன் புள்ளே என்ற இந்த நபர், 361 கிலோமீற்றர் தூரத்தை சைக்கிளில் 24 மணித்தியாலங்களுக்குள் கடந்து யாழ்ப்பாணத்தைசென்றடையவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இப்பயணத்தை ஆரம்பிப்பதற்காக பம்புக்குளிய பிரதேசத்தில் உள்ள முதியவரது இல்லத்தில் இருந்து அவர் மேளதாள வாத்தியத்துடன் பிரதேசவாசிகளால் பம்புக்குளிய தேவாலயம் வரை ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பம்புக்குளிய தேவாலயத்தில் இடம்பெற்ற சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்ட பின்னர், பிற்பகல் 12.45 மணியளவில் அவர் தனது பயணத்தை ஆரம்பித்தார்.

இந்த முதியவர் கடந்த வருடம் நவம்பர் 25 ஆம் திகதி நீர்கொழும்பு, கொச்சிக்கடை பிரதேசத்தில் இருந்து மடு தேவாலயம் வரை 13 மணித்தியாலங்களுக்குள் சைக்கிளில் சென்றுசாதனைபடைத்துள்ளமைகுறிப்பிடத்தக்கது. (05)

# எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றும்போது நேரடி ஒளிபரப்பு நடத்தப்படுவதை நிறுத்துக

## திஸ்ஸ குட்டியாராச்சி கோரிக்கை



எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் பேசும்போது மாணவர்களை பார்வையாளர் கலரிக்கு அனுமதிக்க வேண்டாம். அத்துடன் அவர் பேசும் நேரத்தில் சபை நடவடிக்கைகள் நேரடியாக ஒளிபரப்பப்படுவதையும் நிறுத்த வேண்டும் என அரச தரப்பு எம்.பி.யான திஸ்ஸ குட்டியாராச்சி வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன் வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் பேசும்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நீதிபதிகளை இலக்குவைத்து பேசி வருகிறார்.

அத்துடன் மிகவும் அநாகரிகமாகப் பேசுகின்றார். தவறான வார்த்தை பிரயோகங்களைப் பயன்படுத்துகின்றார். அவர் உரையாற்றும் நேரத்தில் பார்வையாளர் கலரியில் பெருமளவான மாணவர்களும் அமர்ந்திருக்கின்றனர்.

அவர்கள் இதனைப் பார்த்து நாடாளுமன்றம் தொடர்பிலும் எம்.பி.க்கள் தொடர்பிலும் தவறான அர்த்தத்தை ஏற்படுத்திக்கொள்வர்.

அத்துடன் நாடாளுமன்ற விவாதங்கள் நேரலையில் ஒளிபரப்பப்படுவதால் நாட்டு மக்களும் இவ்வாறான தவறான கருத்துக்களையே கொண்டிருப்பர்.

அதனால் எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றும்போது மோசமான வார்த்தைகள் பிரயோகிப்பதால் மாணவர்கள் பார்வையாளர் கலரிக்கு அனுமதிப்பது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும் அதே நேரம் நாடாளுமன்ற நேரலை ஒளிபரப்பு நடவடிக்கையை அரை மணி நேரம் தாமதித்து, தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களை செப்பனிட்டுஒளிபரப்பநடவடிக்கைஎடுக்கவேண்டும்.

- என்றார். (05)

# முல்லையில் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது

புதுக்குடியிருப்பு இரணைப் பாலை பகுதியில் இளைஞன் ஒருவரிடமிருந்து சனிக்கிழம அதிகாலை ஒரு கிலோ 570 கிராம் கஞ்சா மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் இரணைப்பாலை பகுதியிலுள்ள வீட்டிற்கு சென்ற பொலிஸார் வீட்டினுள் சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட போது அவரது வீட்டு அறையில் பொதி செய்யப்பட்ட வகையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ 570கிராம் கேரளா கஞ்சாவை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெரத் தலைமையிலான பொலிஸார் மீட்டுள்ளனர்.

இரணைப்பாலை பகுதியை சேர்ந்த 27 வயதுடைய இளைஞனை கைது செய்ததுடன் இவருக்கு எவ்வாறு கஞ்சா கிடைக்கப்பெற்றது, எங்கிருந்து கொண்டுவந்தார் போன்றவாறாக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவுநீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (05)

# செவனகலவில் ஆணின் சடலம் மீட்பு: சந்தேகத்தில் ஒருவர் கைதானார்!

மொனராகலை - செவனகல பிரதேசத்தில் ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த நிலையில் குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் 31 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை செவனகல பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# ஆட்சியிலிருந்த சகல ஆட்சியாளர்களும் போலியான வாக்குறுதிகளே வழங்கின

## மலையக மக்கள் தொடர்பில் விஜித ஹேரத் கருத்து

ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் பெருந்தோட்டத்துறை மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளன. ஆனால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஏதும் நிறைவேற்றப்படவில்லை.

நவீன காலத்திலும் அவர்கள் முகவரியற்றவர்களாக வாழ்கிறார்கள். இதனால் இவர்களின் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இந்தியத் தமிழர்கள் என்ற அடிப்படையில் பார்க்காமல் இலங்கையர்கள் என்ற ரீதியில் உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒழுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதற்கு பெருந்தோட்டத்துறை மக்கள் ஆரம்ப காலத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள்.

ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளன. ஆனால் எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தற்போது புதிய வாக்குறுதிகளை வழங்கியுள்ளார். இது புதிய வாக்குறுதியல்ல, 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி காலப்பகுதியில் இந்த வாக்குறுதிகளை வழங்கினார்.

1.5 மில்லியனாக மலையக மக்களுக்கு உறுதியான முகவரி இல்லை. அதற்கு உறுதியான காணி உரிமை இல்லை. உயர்நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாடு இல்லாதவர்களாகவே பெருந்தோட்ட மக்கள் இன்றும் வாழ்கிறார்கள். காணி உரிமை வழங்கப்படுவதாக காலம் காலமாக வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் அந்த வாக்குறுதிகள் ஏதும் நிறைவேற்றப்படவில்லை.

வாழும் இடத்தில் இருந்து எப்போது வெளியேற நேரிடும் என்ற அச்சத்தில் பெருந்தோட்ட மக்கள் வாழ்கிறார்கள். 1992 ஆம் ஆண்டு பெருந்தோட்டங்கள் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன. ஆனால் தற்போது தோட்டங்கள் திட்டமிட்ட வகையில் காடாக்கப்படுகின்றன. தோட்ட கம்பனிகளின் ஊடாக வருமானம் கிடைக்கப்பெறுகிறதா என்பதை அரசாங்கம் கணக்காய்வு செய்ய வேண்டும்.

இந்தியத் திட்டத்தின் கீழ் வீடமைப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகிறன்றன. நிர்மாணிப்புகள் இன்றும் முழுமை பெறவில்லை.

60 சதவீதத்துக்கும் அதிகமானோர் இன்றும் லயன் அறைகளில் தான் வாழ்கிறார்கள். தமது வசதிகளுக்கு அமைய வீடுகளை அமைத்துக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.



பெருந்தோட்டப் பகுதிகளில் கல்விக் கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட பாடசாலைகளில் உயர்தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பிரிவு கற்கை நெறிகளை ஆரம்பிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்நிலையில் புதிய பல் கலைக்கழகங்களை ஆரம்பிப்பதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். 1000 ரூபா சம்பளம் கோரி இன்றும் பெருந்தோட்ட மக்கள் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

பெருந்தோட்ட மக்களின் 1000 ரூபா சம்பள கோரிக்கை இன்று சாத்தியமற்றது. தற்போதைய வாழ்க்கை செலவுக்கும், 1000 ரூபா சம்பளத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பொருளாதாரப் பாதிப்பால் பெருந்தோட்டத்துறை ஏழ்மை சுட்டிக்குள் தள்ளப்பட்டுள்ளது. வீடு, சம்பளம் உள்ளிட்ட பிரச்சினைகளுடன் குடிநீர் பிரச்சினையையும் இவர்கள் எதிர்கொண்டுள்ளார்கள்.

பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் பெரும்பாலானவை இன்று மூடப்பட்டுள்ளன. ஆனால் இந்த வைத்தியசாலைகளை அரச வைத்தியசாலைகளாக அடையாளப்படுத்துவதாக கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தோட்ட பாடசாலைகள், தோட்ட வைத்தியசாலைகள் என்று தனித்து அடையாளப்படுத்துவது தவறு. இவர்களும் இலங்கையர்களே. ஆகவே பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் தேசிய நீரோட்டத்தில் இணைக்கப்பட வேண்டும்.

பெருந்தோட்டத்தில் வாழும் மக்களை இந்தியத் தமிழர்கள் என்று வேறுபடுத்தாமல் அவர்களை இலங்கையர்கள் என்று அங்கீகரித்து அவர்களுக்கான வசதிகளை வழங்க

காலைக்கதிர் Kalaikkathir

# கிரிக்கெட் தொடர்பான அமைச்சரவை உபகுழு நியமனம் அமைச்சரின் அதிகாரத்தை இல்லாதொழிப்பதற்கானதல்ல

## சுசில் விளக்கம்

கிரிக்கெட்தொடர்பில்அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உபகுழுதற்போது கிரிக்கெட் தொடர்பில் நிலவும் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்காகவேயன்றி விளையாட்டுத்துறை அமைச்சரின் அதிகாரங்களை இல்லாதொழிப்பதற்கல்ல என சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்று தொடர்பாக சபையில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -



கிரிக்கெட் தொடர்பில் எழுந்த நெருக்கடிகளை நிவர்த்திசெய்யும்வகையிலேயே அமைச்சரவை உப குழு அமைக்கப்பட்டது. குறிப்பாக கிரிக்கெட் போட்டிகளுக்கு சர்வதேச தடை ஏற்படுமானால் அதனை சரி செய்து கொள்வது எவ்வாறு என்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் அமைச்சரவைக்கு அமைச்சரவை உப குழு அமைக்க அதிகாரம் உண்டு.

உதாரணமாக கல்வித்துறைதொடர்பில் உப குழு அமைக்கப்பட்டு அதன் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பில்ஆலோசனைசபைகூட்டங்களில் முன்வைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் கிரிக்கெட் தொடர்பில் உபகுழு நியமிக்கப்பட்டது, அது தொடர்பான நெருக்கடிகளை ஆராய்ந்து போட்டிகளுக்கு தடை ஏற்படுமானால் அதனை நிவர்த்தி செய்து கொள்வது எவ்வாறு என்பதை பரிந்துரை செய்வதற்காகவாகும். அதன் மூலம் விளையாட்டுத்துறை அமைச்சரின் அதிகாரத்திற்கு எந்த தடைகளும் ஏற்படுத்தப்படவில்லை. அமைச்சரவையில் அது தொடர்பில் எந்தவித பேச்சுகளும் நடத்தப்படவில்லை. - என்றார். (05)

# மருமகன் தாக்கி மாமியார் சாவு

மீரிகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பொல்லால் அடித்து கொலை செய்யப்பட்ட நிலையில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் மீரிகம , மாகுர பிரதேசத்தைச் சேர்ந்த 64 வயதுடைய பெண்ணாவார்.

இவர் தனது மகளின் கணவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதால் மகளின் கணவனால் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இதனையடுத்து சந்தேகநபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீரிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பெருந்தோட்டங்களில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அனைவரும் ஒத்துழைப்பு வழங்குக

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை



பெருந்தோட்ட பகுதிகளில் குடிநீர் பிரச்சினை உள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். பெருந்தோட்ட பகுதிகளில் 44 சதவீதமளவில் குடிநீர் திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நீர்வழங்கல் அமைச்சின் ஊடாக வழங்கப்படும் குடிநீரை காட்டிலும் ஊற்று நீர் தூய்மையானது என பெருந்தோட்டங்களில் பெரும்பாலானோர் கருதுகிறாக்கள்.போதியவிழிப்புணர்வு கிடையாது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

பெருந்தோட்ட பகுதியில் உள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறேன் என நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்தின் போது மக் கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் விஜித ஹேரத் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியவை வருமாறு -

மக்கள் விடுதலை முன்னணியின்நாடாளுமன்றஉறுப்பினர்விஜித ஹேரத்முன்வைத்தகேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2015 ஆம் ஆண்டு பெருந்தோட்ட பகுதிகளுக்கு சென்று காணி உரிமை வழங்குவதாக வாக்குறுதி வழங்கினார் எனக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி என்பவர் மலையக மக்களுக்கு மாத்திரம் சொந்தமானவர் அல்லர். அவர் ஒட்டுமொத்த மக்களின் பிரதிநிதி. ஆகவே ஜனாதிபதி வழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு உண்டு. தற்போது வழங்கப்பட்டுள்ள வாக்குதியைநிறைவேற்றவேண்டிய பொறுப்புஎனக்கும்எனதுகுழுவுக்கும் உரித்தாக்கப்பட்டுள்ளது. எம் மீது நம்பிக்கைகொள்ளுங்கள். வாக்குறுதிகளை நிறைவேற்ற நீங்களும் ஒத்துழைப்பு வழங்குங்கள்.

சம்பள பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. முதலாளிமார் சம்மேளனத்துடன் இடம்பெற்ற பேச்சில் மக்கள் விடுதலை முன்னணியினரும் கலந்துகொண்டார்கள். இறுதியில் கூட்டு ஒப்பந்தம் நீக்கப்பட்டது. ஆகவே சம்பள பிரச்சினைக்கு மாற்று நடவடிக்கைள் ஊடாகத் தீர்வு காண வேண்டும்.

பெருந்தோட்ட மக்களுக்கு முகவரி இல்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் விஜித ஹேரத் குறிப்பிட்ட விடயம் தவறு.விஜித ஹேரத் அவர்களே உங்களின்மேசைமீதுஉள்ளதாளில் நான் குறிப்பிடும் முகவரிக்கு கடிதம் அனுப்புங்கள்,நாளைய தினமே உரிய நபரை கடிதம் சென்றடையும். ஆகவே பொய்யான விடயங்களைக் குறிப்பிட்டு மக்களை தவறாக வழிநடத்த வேண்டாம்.

பெருந்தோட்டப் பகுதியில் ஒரு லட்சத்து 76 ஆயிரம் தனி வீடுகளுக்கான கேள்வி காணப்பகிறது. தற்போது அமைக்கப்படும் தனி வீடுகளுக்கு முகவரி வழங்கப்படுகிறது.

காணி உரிமை வழங்குவதற் கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. 10 பேச்சஸ் காணிவழங்குவதற்கு225நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். காணி உரிமை தொடர்பில் பிரதமர் தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த முயற்சிக்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறேன்.

பெருந்தோட்ட பகுதிகளில் குடிநீர் பிரச்சினை உள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். பெருந்தோட்ட பகுதிகளில் 44 சதவீதமளவில் குடிநீர் திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. நீர்வழங்கல் அமைச்சின் ஊடாக வழங்கப்படும் குடிநீரை காட் டிலும் ஊற்று நீர் தூய்மையானது என பெருந்தோட்டங்களில் பெரும்பாலானோர் கருதுகிறார்கள்.போதிய விழிப்புணர்வு கிடையாது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள 156 மருத்துவமனைகளை அரச மருத்துவ கட்டமைப்புக்குள் கொண்டு வர முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல முன்னெடுத்தார். இருப்பினும் பொருளாதார பாதிப்பு,அரசியல் நெருக்கடி ஆகிய காரணிகளால் அந்த முயற்சி தாமதமடைந்தது.

எதிர்வரும் நாள்களில் அந்தத் தீரமானத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.பெருந்தோட்ட பகுதிகளுக்கு அரசு எவ்வித அபிவிருத்திகளையும்முன்னெடுக்கவில்லை என்று குறிப்பிட முடியாது.மலையகப் பிரதிநிதிகள் சகல அரசுகளிலும் அங்கம் வகித்துள்ளார்கள். அவர்களும்தங்களுக்கு இயலுமான அளவுக்கு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துள்ளார்கள். ஆகவே எம்மால்மாத்திரம்தனித்துஎதனையும் சாதிக்க முடியாது என்பதால் தான் அனைவரது ஒத்துழைப்பையும் தொடர்ந்து கோருகிறேன். - என்றார். (05)

# கூட்டு ஒப்பந்தம் இன்றி தோட்டக் கம்பனிகள் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றன

## இராதாகிருஸ்ணன் எம்.பி. குற்றச்சாட்டு

சம்பள நிர்ணய சபையா அல்லது கூட்டு ஒப்பந்தமா என்று தற்போது பேசப்படுகிறது.என்னை பொறுத்தவரை கூட்டு ஒப்பந்தம் மீண்டும் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளேன். கூட்டு ஒப்பந்தம் இல்லாத காரணத்தால் தோட்ட கம்பனிகள் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றன. ஆகவே கூட்டு ஒப்பந்தம் தொடர்பான தீர்மானங்களுக்கு மலையக மக்கள் முன்னணி இணக்கம் தெரிவிக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நீர் வழங்கல்,தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்கான செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

1994 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மலையகத்துக்கு என்று தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்ற அமைச்சை உருவாக்கி, காலஞ்சென்ற சௌமிய மூர்த்தி தொண்டமானுக்கு அந்த அமைச்சை வழங்கினார்.

மலையகத்துக்கு என்று ஓர் அமைச்சு உருவாக்கப்பட்டதன் பின்னரே மலையகத்துக்கான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட காணி விவகாரத்துக்காக 4 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் பெருந்தோட்ட பகுதிகளுக்கு சகல துறைகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

பெருந்தோட்டபகுதிகளில்லயன்குடியிருப்புகளில் தீவிபத்து வழமையானதொன்றாக காணப்படுகிறது. கடந்த ஆண்டு 795 குடும்பங்களை சேர்ந்த 3306 பேரும்,2023 ஆம் ஆண்டு நிறைவடைந்து 10 மாத காலப்பகுதியில் 73 குடும்பங்களை சேர்ந்த 307 பேரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பெருந்தோட்ட பகுதிகளில் இடம்பெறும் அனர்த்தங்களின் போது அனர்த்த முகாமைத்துவ நிலையம் கவனத்திற் கொள்ளாமல் செயற்படுகிறது.

பெருந்தோட்ட கம்பனிகள் ஊடாக அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்என்றுஅனர்த்தமுகாமைத்துவநிலையம் குறிப்பிடுவது நியாயமற்றது.காணப்படும் சட்ட சிக்கல்களை அனர்த்தங்களின் போதும்,அதன் பின்னரான போதும் குறிப்பிட்டுக் கொண்டிருக்க முடியாது. சம்பள நிர்ணய சபையா அல்லது கூட்டு ஒப்பந்தமா என்று தற்போது பேசப்படுகிறது.என்னை பொறுத்தவரை கூட்டு ஒப்பந்தம் மீண்டும் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளேன். கூட்டு ஒப்பந்தம் இல்லாத காரணத்தால் தோட்ட கம்பனிகள் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றன. ஆகவே கூட்டு ஒப்பந்தம் தொடர்பான தீர்மா னங்களுக்கு மலையக மக்கள் முன்னணி இணக்கம் தெரிவிக்கும்.

மலையகம் தொடர்பில் குறைகளை மாத்திரம் குறிப்பிட முடியாது.பல நிறைகளும்,முன்னேற்றங்களும் காணப்படுகின்றன.எமது மலையக இளைஞர், யுவதிகள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சாதிக்கிறார்கள்.

எதிர்வரும் மாதம் 24 ஆம் திகதி மலையகம் 200 நிகழ்வை நாங்கள் நடத்தவுள்ளோம். எமது சமூகத்தின் முன்னேற்றம் மற்றும் நவீன அடையாளத்தை நான் உறுதிப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது பல வாக்குறுதிகளைவழங்கியுள்ளார்.எமது அரசாங்கத்திலும் பல வாக்குறுதிகளை வழங்கினார். ஆனால் எதனையும் செய்யவில்லை.அவர் எவ்வாறானவர் என்பதை நாங்கள் நன்கு அறிவோம்.

கொட்டகல பகுதியில் கல்வியியற் கல்லூரி அமைக்கப்பட்ட போது அதற்கு ஸ்ரீ பாத என்று பெயர் சூட்ட வேண்டும்.தமிழ் மாணவர்களுக்கு முழுமையான அங்கீகாரம் வழங்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் சௌமிய மூர்த்தி தொண்டமான் வலியுறுத்தினார்.

அதன்போது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீபாத கல்லூரியில் 75 சதவீதம் தமிழ் மாணவர்களுக்கும்,25 சதவீதம் சிங்கள மாணவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.தற்போதும் அவர் இந்த நிலையில் இருந்து மாற்றமடைந்திருப்பார் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. - என்றார். (05)

# விடுதலைப் புலிகளின் நடேசனை புகழ்ந்துதள்ளும் பௌத்த துறவி

தமிழீழவிடுதலைப்புலிகளின் காவற்துறை பொறுப்பாளர் நடேசனை முன்னாள் இராணுவச் சிப்பாயும் தற்போதைய பௌத்த பிக்குவுமான எகிரியே சுமன தேரர் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.



மிக இள வயதில் இராணுவத்தில் இணைந்து கொண்ட இவர் தான் கடமையாற்றிய காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மை கைது செய்து தடுத்து வைத்திருந்தனர் எனத் தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில் -

விடுதலைப்புலிகள் என்னைக் கைதுசெய்து பொலிஸ் பிரிவில் தடுத்து வைத்திருந்தனர்.

புலிகளின் காவற்துறை பொறுப்பாளர் நடேசன் என்னை மிகவும் அன்புடன் பார்த்துக் கொண்டார்.

தனக்கும் 17 வயதான மகன் இருப்பதாகவும், அவரும்ஒருசிங்களபெண்ணையேமணம்முடித்தார் எனவும் நடேசன் என்னிடம் தெரிவித்தார். தமிழர்ஒருவரை மணம் முடித்த காரணத்தால் தெற்கில் வாழ்ந்த அவரது மனைவியின் உறவினர்கள், அவரை ஒதுக்கிவிட்டனர் எனத் தெரிவித்தார். நடேசன் என்னை ஒரு கைதியை போன்று நடத்தாது மிகவும் சுதந்திரம் கொடுத்து அவரது பிள்ளையைப் போன்று மனிதாபிமானத்துடன்நடத்தினார். கைதுசெய்துஅழைத்துச் செல்லப்பட்ட தினமே நடேசன் எனக்கு ஆடைகள் முதல் அனைத்துப் பொருள்களையும் வாங்கிக் கொடுத்தார். சில மாதங்கள் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட போதிலும் எனக்கு அனைத்து விதமான வசதிகளும் வழங்கப்பட்டிருந்தன.

புலிகள் என்னை விடுவித்த பின்னர் இராணுவத்திலிருந்து விலகி துறவறத்திற்குச் சென்றேன். இமயமலையில் சமாதியாவதே எனது நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# ‘ஒப்பரேன் என்டபே’ அதிரடி மீட்பு...............

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்குப் பதிலடியாக இஸ்ரேலிய உளவு நிறுவனம் ஒலிம்பிக் வீரர்களைக் கொன்ற 11 பாலஸ்தீன தீவிரவாதி களை உலகம் முழுவதும் சுமார் 20 ஆண்டுகளாக தேடி வேட்டையாடிக் கொன்றது. முயுனிச் சம்பவத்தையும் அதன் தொடர்ச்சியாகத் தீவிரவாதிகளை இஸ்ரேல் இராணுவம் வேட்டையாடுவதையும் மையமாக வைத்து ஸ்டீபன் ஸ்பீல்பர்க் முயுனிச் என்ற பெயரில் திரைப்படம் எடுத்து 2005ஆம் ஆண்டு வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.



### ஏர் பிரான்ஸ் விமான கடத்தல்

1976 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 27இல் இஸ்ரேல் தலைநகரான டெல் அவிவ்விலிருந்து பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகருக்குச் சென்று கொண்டிருந்த ஏர் பிரான்ஸ் விமானம் ஏதன்ஸ் நகரில் தரை இறங்கியபோது, பாப்புலர் ஃப்ரண்ட் (PFLP) என்ற பாலஸ்தீனிய அமைப்பைச் சேர்ந்தவர்களும், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஒரு தீவிரவாத அமைப்பினரும் சேர்ந்து



விமானத்தைக் கடத்தினார்கள். கடத்தப்பட்ட விமானம் உகாண்டா நாட்டில் உள்ள என்டபே விமானத் தளத்திற்கு கடத்திச் செல்லப்பட்டது. விமானத்தில் 304 பயணிகள் மற்றும் 12 சிப்பந்திகள் உட்பட 316 பயணம் செய்தனர்.

இஸ்ரேலிய அரசுடன் தொடர்பு கொண்ட பாலஸ்தீன அமைப்பின் கோரிக்கையாக இஸ்ரேலில் உள்ள 40 போராளிகளையும், கென்யா நாட்டில் உள்ள 13 போராளிகளையும் விடுதலை செய்யவேண்டும் என்பது இருந்தது. இஸ்ரேலிலிருந்து எண்டபே நகரம் சுமார் 4000 கி.மீ தொலைவில் இருந்தது. இஸ்ரேல் உடனடியாக மீட்கும் காரியத்தில் இறங்கியது.

ஒபரேன் தண்டர்போல்ட் - Operation Thunderbolt


கடத்தப்பட்டவர்களை மீட்க இஸ்ரேலில் ஆபரேன் தண்டர்போல்ட்க்கு (Operation Thunderbolt) ஏற்பாடுகள் நடந்தன. ஜுலை 3 ஆம் தேதி இரவு, நான்கு கனரக விமானங்கள் (ஹெர்குளிஸ் சி 130) தயாராகின. அவை உருவில் பெரியதாக இருக்கக்கூடிய விமானங்கள். 100 இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் விமானங்களில் ஏறிக்கொண்டனர்.

இராணுவத்தளவாடங்களும், ஆயுதங்களும் ஏற்றப்பட்டன. மருத்துவர்களும், செவிலியர்களும் ஏற்றப்பட்டனர். விமானங்கள் எண்டபேக்கான 4000 கி.மீ. பயணத்தை தொடங்கின. கடல் மார்க்கமாகவே விமானங்கள் பறந்தன.

ஆபிரிக்கா கண்டத்தில் மற்ற நாடுகளின் அருகாமையில் பறக்கும்போது, அவர்களின் ரேடார்களின் பார்வையில் பட்டுவிட்டால் விபரீதம்தான். அதனால் ரேடார்களின் பார்வையில் படாமால் இருப்பதற்காக நூறு அடி உயரத்திற்குக் குறைவான உயரத்தில்தான் இஸ்ரேலிய விமானங்கள் பறந்தன.

இந்த நீண்ட பயணத்தில் ஒரு சிக்கல் ஏற்பட்டது. அதாவது விமானங்களுக்கு எரிபொருள் தேவைப்படும். போகும் வழியில் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பப்படவேண்டும். இல்லையென்றால் இந்த மீட்பு முயற்சி தோல்வியில் முடியும். இஸ்ரேல் அரசு, கென்யா அரசின் உதவியை நாடியது. கென்யா அரசு எரிபொருள் நிரப்ப ஒப்புக்கொண்டது. இதற்காக கென்யா அரசு பின்னாளில் பல பின்விளைவுகளைச் சந்தித் தது

தொலைதூர பயணத்தின் பின் நான்கு விமானங்களும் எண்டபே விமான நிலையத்தில் சத்தமில்லாமல் தரை இறங்கின. விமானத்திலிருந்து இராணுவ பீரங்கிகள் மற்றும் ஜீப்புகளுடன் இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் இறங்கினர். திடீர் அதிரடியால் பணயக் கைதிகளை விடுவித்து இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் கூட்டிச் செல்லும் வழியில், தீவிரவாதிகள் எதிர்தாக்குதலில் ஈடுபட்டனர். அவர்களுடன் உகாண்டா



இராணுவமும் சேர்ந்துகொண்டு, மீட்புக் குழுவினருக்கும், தீவிரவாதிகளுக்கும், உகாண்டா இராணுவ வீரர்களுக்கும் நடந்த இந்தச் சண்டையில் இரண்டு பணயக் கைதிகளும் ஒரு இஸ்ரேலிய தளபதியான யோனாதன் நேத்தன்யாஹூம் கொல்லப்பட்டனர்.

### பிரதமர் நேத்தன்யாஹூவின் அண்ணன் களச் சாவு

இவர் வேறுயாறும் அல்லர், இன்றைய இஸ்ரேலின் பிரதமரானபெஞ்சமின்நேத்தன்யாஹூவின்தமையனாரேதான். கடத்தல்காரர்கள் தரப்பில் அனைத்துக் கடத்தல்காரர்களும் உயிரிழந்தனர். உகாண்டா இராணுவத்தைச் சேர்ந்த 40 வீரர்களும் நடந்த சண்டையில் கொல்லப்பட்டனர். மீட்பு முயற்சி சுமார் 90 நிமிடங்கள் நடைபெற்றது. ஏனைய பணயக் கைதிகளும், இஸ்ரேலிய இராணுவ வீரர்களும் நாடு திரும்பினர்.

ஒப்பரேன் தண்டர்போல்ட் வெற்றிகரமான நடவடிக்கைகள் யாவும் ‘90 Minutes at Entebee’ என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்திருக்கிறது. இந்தச்சம்பவங்களைவைத்து ஹாலிவுட்டில் பல திரைப்படங்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றில் தி டெல்டா போர்ஃஸ் (The Delta Force) எனும் படம் குறிப்பிடத்தக்கது.

நீண்ட கால இராணுவ வெற்றிகளை கண்ட இஸ்ரேலிய இராணுவம், தற்போதய காசா போரில் தரைவழியாக முன்னேற்றம் அடைந்தாலும், பணயக் கைதிகளை தனது படை நடவடிக்கை மூலம் விடுவிக்கவில்லை. ஆயினும் போர் நிறுத்தத்திற்கு தொடர்ந்து இஸ்ரேல் மறுத்து வந்த நிலையில், பணயக் கைதிகளின் உறவினர்கள் மற்றும் மக்கள் போராட்டம், இஸ்ரேலின் முடிவை மறுபரிசீலனை செய்யவைத்துள்ளது. இதன்பிறகு இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தமானது நான்கு நாள் போர் நிறுத்தம் மற்றும் பணயக் கைதிகள் விடுதலையை உள்ளடக்கிய உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

# கார்த்திகை தீபம் ஏற்றுவோம் வாரீர் !



மாலயன் மருளது போக்கிய காலம்
மலரடி திருமுடி உணர்த்திய காலம்
தேவரும் தெரிசனம் கண்டநற் காலம்
திருவிளக் கேற்றிடும் கார்த்திகைக் காலம்

கந்தனை வந்தனை செய்திடு காலம்
கனற்பொறி குழந்தையாய் ஆகிய காலம்
நொந்திடு அடியவர் பவவினை போக்கிட
செந்திரு விளக்கதை ஏற்றிடும் காலம்

ஒளிர்வளர் விளக்காய் ஒளிர்ந்திடும் காலம்
தெளிவதைக் கருத்தி லமர்த்திடும் காலம்
பொலிவுடன் பேரொளி தோன்றிய காலம்
போற்றியே தீபத்தை ஏற்றுவோம் வாரீர்

ஆண்டவன் நினைப்பை அகற்றிய ஆணவம்

தாண்டவம் தகர்ந்த தகைவுடைக் காலம்
நீண்டிடும் மாயையை நிர்மல மாக்கிய
நிலைபெறு சக்தியை உணர்த்திய காலம்

நெறிபிறள் நினைப்பினை நீக்கிய காலம்

அறிவெனும் உண்மையை அமர்த்திய காலம்
பொறிபுலன் சிவனருள் புகுத்திய காலம்
போற்றிடும் கார்த்திகை பொன்னிகர் காலம்
ஆலயம் எங்கனும் தீபங்கள் ஒளிரும்

அனைவரும் தீபத்தை நாடியே நிற்பார்
வீதிகள் வீடுகள் ஒளியினை நல்கும்
விளக்குகள் ஏற்றிடும் சிறப்புடைக் காலம்

ஒளியிலே இறையினை இருத்திடும் காலம்

உவப்புடன் தீபத்தை ஏற்றிடும் காலம்
மனவிருள் போக்கிட வந்திட்ட காலம்
மண்ணிலே மலர்திட்ட மாண்புடைக் காலம்

அண்ணா மலையினை அகத்தில் அமர்த்திட

உண்ணா முலையான் ஒளிர்ந்திட்ட காலம்
அருட் பெரும்ஜோதி தனிப்பெருங் கருணை
அளவிலா ஆற்றலை அருளிய காலம்

மரத்தில் மறைந்த மாமத யானையை
பரத்தில் மறைந்த பார்முதல் பூதத்தை
இருத்தி மனத்தில் ஏற்றுவார் தீபத்தை
கொளுத்துவார் சொக்கப் பனையைக்
கோவிலில்

மாதொரு பாகனை மனமதில் இருத்தி
மங்கலம் பொங்கிட தீபத்தை யேற்றி
தீமைகள் அகல கார்த்திகை விளக்கை
சிறப்புடன் ஏற்றிடச் சேருவோம் வாரீர்

விஞ்ஞான உண்மை விளக்கினில் இருக்கு
மெஞ்ஞானம் அதனுள் வியாபித்தே இருக்கு
ஒளியினை அறிவாய் கொண்டிடும் வேளை
ஒளியினை உணர்வாய் ஆக்கிடும் சமயம்

இருளது சூழின் எதுவுமே தெரியா
இருளது இருப்பு மருளவே வைக்கும்
ஒளியது வந்தால் தெளிவது பிறக்கும்
தெளிவது சிவமாய் ஒளியென ஒளிரும்

அகமதில் இருளை அகற்றிட வேண்டும்
அருளெனும் ஒளியை இருத்திட வேண்டும்
அருளெனும் ஒளியை அளிப்பது இறையே
இறையினை எண்ணி ஏற்றுவோம் விளக்கினை

கார்த்திகை தீபம் ஏற்றும் வாரீர்
கந்தனை சிந்தையில் இருத்துவோம் நாளும்
ஊற்றிடும் எண்ணையாய் ஆகுவோம்
நாங்கள்
உணர்விலே பத்தியை இருத்தியே வாழுவோம்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .... ஆஸ்திரேலியா

# ஜா-எல பொலிஸ் நிலைய சார்ஜன்டின் இறுதிக் கிரியைகள் சாவகச்சேரியில்

## மேல் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் தென்னக்கோன் பங்கேற்றார்





சந்தேகநபரை துரத்திச் சென்ற போது காணமல்போய் சடலமாக மீட்கப்பட்ட ஜா - எல பொலிஸ் உத்தியோகத்தரான 26 வயதுடைய கிருஷ்ணமூர்த்தி பிரதாபனின் இறுதிக்கிரியைகள் யாழ்ப்பாணம் சாவகச் சேரியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றன.

உயிரிழந்தவரின் இறுதிக்கிரியை பூரண அரச மரியாதையுடன் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டதுடன் பொலிஸ் திணைக்களத்தினர் இறுதி மரியாதையை செலுத்தினர்.

இறுதிக்கிரியையின்போது மேல்மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கலந்து கொண்டு உயிரிழந்தவருக்கு இறுதி மரியாதையை செலுத்தி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறி ஒரு தொகை பணத்தையும் கையளித்தார்.

உயிரை துச்சமென கருதி உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கிருஷ்ணமூர்த்தி பிரதாபன் பொலிஸ் சார்ஜன்டாக பதவி உயர்வு பெற்றுள்ளதுடன் அவருக்குரிய கொடுப்பனவுகள் கிடைக்கபெறும் என மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் குடும்பத்தினருக்கு வாக்குறுதியளித்தார்.

இதன்போது பொலிஸ் திணைக்கள உயரதிகாரிகள், வடமாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் பூதவுடல் அரச மரியாதையுடன் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நேற்று மதியம் தகனம் செய்யப்பட்;டது.

கடந்த வியாழக்கிழமை (23) குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட மேலும் சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஜா-எல பகுதியில் நீரோடை மூலம் தப்பிச் செல்ல முயன்ற சந்தேக நபரை துரத்திச் சென்ற போது குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.(05)





# வடக்கு - கிழக்கில் ஆயிரம் விகாரைகளை நிறுவ தமிழ் கூட்டமைப்பு கை உயர்த்தியது

## கொழும்பு மாநகர முன்னாள் உறுப்பினர் சாட்டை




வடக்கு - கிழக்கில் ஆயிரம் விகாரைகளை நிறுவ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கை உயர்த் தியது என புதிய ஜனநாயக மக்கள் முன்னனியின் தலைவரும், முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான நடராஜா ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடமாகாணத்தில் வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடந்த வாரம் மிலேச்சத்தனமான, கோழைத்தனமான செயலை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

அந்த சம்பவத்தை புதிய ஜனநாயக மக்கள் முன்னணி முழு மையாக கண்டிக்கின்றது. இந்த காட்டுமிராண்டிப் பொலிஸாரை உடனடியாக வடமாகாணத்திற்கு பொறுப்பான சிரேஸ்ட பொலிஸ் மா அதிபர் அல்லாவிட்டால் பிரதி பொலிஸ் மா அதிபர் அவர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

மாறாக பொலஸார் செயற்பட்ட விதம் தவறானது. ஒரு சில பொலி ஸார் மேற்கொள்ளும் செயற்பாடு மிக மோசமானதாக இருக்கின்றது.

குறித்த இளைஞர் திருட்டு சம்பவத்தில் உண்மையாக ஈடுபட்டிருந்தாலும் கூட, அவரை விசாரிப்பதற்கான பல விதிமுறைகள் இருக்கின்றன.

ஆனால் அவற்றை மீறி துன்புறுத்தி வற்புறுத்தப்பட்டு பெற்றோல் ஊற்றப்பட்டு சித்திர வதை செய்து அவரைக் கொலை செய்துள்ளார்கள்.

இந்தச் செயலை நிறுத்தியிருக்க வேண்டும். அச்சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸாரைக் கைது செய்யாது அவர்களை வேறு பொலிஸ் நிலையத்துக்கு மாற்றுவது என்பது மக்களை ஏமாற்றும் செயல்.

சட்டத்தரணி சிறிகாந்தா ஊடாக யாழ்.நீதிமன்றில் இளைஞருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரப்பப்பட்டது.

இவர்கள் மாபெரும் திருடர்கள். அவர்கள் அதனை திசை திருப்ப முயல்கிறார்.

இவ்வாறான சம்பவங்கள் வடக்கு - கிழக்கில் நடைபெறும் நிலையில் இங்குள்ள தமிழ் கட்சிகள் வாயை மூடிக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால் நாங்கள் மக்களது பிரச்சினைக்கு குரல் கொடுக்க தயங்குவதில்லை. இந்த விடயம் சம்பந்தமாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிலான் அலஸ் அவர்கள் உடனடியாக செயற்பட வேண்டும். - என்றார். (05)

# இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் நடத்திய இலவச வைத்திய முகாம்



கொழும்பு மாநகர சபையும் இலங்கை செஞ்சிலுவை சங்கமும் இணைந்து நடத்திய இலவச வைத்திய முகாம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கொழும்பு 5 மயூரா பிளேஸில் அதிகளவான மக்கள் பங்களிப்புடன் நடைபெற்றது.

இந்த நிகழ்வு அனுபவம் பெற்ற வைத்தியர்கள் மற்றும் தாதியர்களோடு இலங்கை செஞ்சிலுவை சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டு வைத்திய பரிசோதனைகளையும் வைத்திய ஆலோசனைகளையும் மக்களுக்கு பெற்றுக் கொடுத்தனர்.

இதன் போது இரத்தச் சர்க்கரை பரிசோதனை, உயர் இரத்த அழுத்த பரிசோதனை, கண் பரிசோதனை மற்றும் ஆயுர்வேத மருந்துகள் வழங்குதல், உடல் குறியீட்டெண் பரிசோதனை போன்றவற்றோடு நோயாளிகளுக்கான அனைத்து மருந்து மாத்திரைகளும் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த வைத்திய முகாமிற்கு பிரதான ஒழுங்கு அமைப்புகளைச் செய்த கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜி. விஷ்ணுகாந்த் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், எதிர்காலத்தில் இதுபோன்ற பல வைத்திய முகாம்களை கொழும்பு மாவட்டத்தில் நடத்த உள்ளதாகவும் தெரிவித்தார்.(05)

# மாவீரர்களின் குடும்பங்கள் வவுனியாவில் கௌரவிப்பு



வவுனியாவில் மாவீரர் குடும் பங்களைக் கௌரவிக்கும் நிகழ்வு போராளிகள் நலன்புரிச்சங்கத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது மாவீரர் குடும்பத்தை சேர்ந்தவர்கள் தோணிக்கல் வைரவர் ஆலயத்தில் இருந்து மங்கள வாத்தியங்களுடன் சங்க அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து மாவீரர்களுக் கான ஒரு நிமிட அகவணக்கத்துடன், உயிர்நீர்த்த மாவீரர்களுக்கான ஈகை சுடர் ஏற்றப்பட்டு, மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. (05)

# 18,516 ஆயுர்வேத மருத்துவர்கள் பதிவு செய்யப்படவே இல்லை

நாட்டில் 18 ஆயிரத்து 516 ஆயுர்வேத வைத்தியர்கள் பதிவு செய்யப்படாதுள்ளார்கள் என கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது,

ஆயுர்வேத வைத்தியர்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை தமது பதிவை புதுப்பித்துக் கொள்ள வேண்டியிருந்தாலும், குறித்த வைத்தியர்கள் தமது பதிவை புதுப்பிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கடந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரை பதிவு செய்யப்பட்ட 26,650 பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர்களில் 3,827 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டாலும், சரியான தகவல்கள் இதுவரையில் புதுப்பிக்கப்படவில்லை.

இதன் காரணமாக உயிரிழந்த வைத்தியர்களின் பதிவுச் சான்றிதழ்கள் தவறாகப் பயன் படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளனஎனவும் கணக்காய்வாளர் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (05)

# பருத்தித்துறையில் வாள்வெட்டு இளைஞர் ஒருவர் படுகாயம்

பருத்தித்துறையில் சனிக்கிழமை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்ப வத்தில் இளைஞர் ஒருவர் படுகா யமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கந்தவுடையார் ஒழுங்கை, பருத்தித்துறையைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் டிலக்சன் (வயது 23) என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

வீதியால் சென்ற இளைஞரை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வாளால் வெட்டியுள்ளனர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந் துள்ளது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.11.2023இல் வெளியிடப்பெற்றது.